# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - JANUARY 2025
VOL. 22 ISSUE 10 - 36 PAGES - Rs. 21/-

ஜனவரி 2025

*ஏற்றகாலத்திலே*
**மழையைப் பெய்யப்பண்ணுவேன்;**
**ஆசீர்வாதமான மழை பெய்யும்**
(எசேக்கியேல் 34:26)

# 2025
## ஆசீர்வாத மழையின் ஆண்டு



# UTurn வாலிபர் திருவிழா

## ராஞ்சி அறிக்கை

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் 2024 டிசம்பர் 7ம் தேதி UTurn வாலிபர் திருவிழா நடைபெற்றது. இந்த ஒருநாள் மாநாட்டில் அந்த மாநிலம் முழுவதும் இருந்து ஐயாயிரத்துக்கும் அதிகமான வாலிப பெண்களும் ஆண்களும் கலந்துகொண்டனர்; அவர்கள் வாழ்க்கை மறுரூபமானது. வாலிபர்கள், சமுதாயத்தில் எதிர்கொள்ளும் சவால்களை மேற்கொள்ளும்படி அவர்களை பெலப்படுத்தவும், தேவன் தங்களுக்கென்று நியமித்திருக்கும் நோக்கத்தை, இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைப்பதன் மூலம் கண்டுகொள்ளவும் இம்மாநாடு உதவியது.

**மாநாட்டின் முக்கிய அம்சங்கள்**

### தொடக்க நிகழ்வு

UTurn தலைவர்களான சாமுவேல் தினகரனும் ஸ்டெல்லா ரமோலாவும் "நாம் ஏன் இங்கே இருக்கிறோம்?" என்ற தலைப்பில் கொடுத்த ஆரம்ப செய்தி, இயேசுவின் வல்லமையினால், சமுதாய எதிர்பார்ப்புகளுக்கும் மேலாக, மகத்துவத்தை நோக்கி எழும்புவதற்கு அனைவரையும் உற்சாகப்படுத்தியது.

### சிறப்பு நிகழ்ச்சிகள்

ராஞ்சியில் உள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுர குழுவினர் குறுநாடகம் ஒன்றையும் ஆராதனை வேளையையும் நடத்தினர். காருண்யா அகாடமி இறையியல் கல்வி மற்றும் காருண்யா நிகர்நிலைப் பல்கலைக்கழக மாணவ மாணவியர் வழங்கிய பாவனை நடனமும் (choreography) செய்திகளும் அனைவருக்கும் மகிழ்ச்சி அளித்ததுடன் ஆவிக்குரிய சிந்தனையையும் தூண்டின.





### வல்லமை நிறைந்த ஆராதனை

ஸ்டெல்லா ரமோலாவும் டேனியல் டேவிட்சனும் தங்கள் குழுவினருடன் இணைந்து நடத்திய ஆராதனை அனைவரையும் வல்லமையால் நிரப்பியது. பரிசுத்த ஆவியானவரின் பெலத்தினால் பாவத்தை மேற்கொள்வது குறித்து ஸ்டெல்லா பகிர்ந்துகொண்ட செய்தியைக் கேட்டு அநேகர் மனந்திரும்பினர்; பலர் தங்கள் வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு மறுஅர்ப்பணம் செய்தனர்.

### கேள்வி – பதில் கலந்துரையாடல்

தேவனுடைய சித்தத்தை புரிந்துகொள்ளுதல், பின்பற்றுதல், மாம்ச இச்சை உள்ளிட்ட தனி வாழ்க்கை போராட்டங்களை மேற்கொள்ளுதல், தரிசனங்களை குறித்த தெளிவை அடைதல், தேவனுடைய நினைவுகளை வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளுதல் போன்ற பல தலைப்புகளில் வாலிப பெண்களும் ஆண்களும் எழுப்பிய கேள்விகளுக்கு சாமுவேல் தினகரனும் ஸ்டெல்லா ரமோலாவும் பதிலளித்தனர். ராஞ்சியிலுள்ள ஒவ்வொரு வாலிப பெண்ணிடமும் ஆணிடமும் ‘நீ என்னுடையவள் (ன்)’ என்று ஆண்டவர் கூறுகிறார் என்ற தீர்க்கதரிசன செய்தியை சாமுவேல் தினகரன் வழங்கினார். பின்னர் அவர் வல்லமையாக பிரார்த்தனை ஏறெடுத்தபோது, நூற்றுக்கணக்கான வாலிபர்கள் முன்வந்து தங்கள் வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தனர். தேவ பிரசன்னத்தால் அநேகர் மறுரூபமாகுதலின் அனுபவத்தை பெற்றனர்.

**தேவ மகிமைக்கென பல சாட்சிகள் எழும்பின. அவற்றுள் சில:** 5 ஆண்டுகளாக கடுமையான முதுகுவலியால் அவதிப்பட்ட சகோ. மகாபிர் டண்டி சுகம் பெற்றார். 3 மாதங்கள் தோள்பட்டை வலியினால் கஷ்டப்பட்ட லூட்ரி முண்டினே என்ற சகோதரியும் குணம் பெற்றார்கள். ஏறத்தாழ 31 ஆண்டுகள் சரியாக பேச முடியாமலும், தெளிவாக கேட்க இயலாமலும் இருந்து சோய்னா முண்டா என்ற சகோதரரால் தெளிவாக பேச முடிந்தது; காதுகளும் தெளிவாக கேட்க ஆரம்பித்தன. பிசாசினால் பிடிக்கப்பட்டிருந்தோர் அநேகர் விடுவிக்கப்பட்டனர்.

ராஞ்சியை சேர்ந்த வாலிபர்களுக்கு UTurn வாலிபர் திருவிழா உண்மையாகவே முக்கியமான ஆவிக்குரிய அனுபவத்தை அளித்தது. கிறிஸ்துவுடன் ஆழமான ஐக்கியம் கொள்ள அவர்களை ஊக்குவித்ததுடன், வாழ்வின் சவால்களை விசுவாசத்துடனும் தைரியத்துடனும் எதிர்கொள்ள பயிற்றுவித்தது. தேவ நாமம் அதிகமாய் மகிமைப்பட்டது.






# ஆசீர்வாதமான மழை

அன்பானவர்களே, 2025ம் ஆண்டுக்குள் நாம் செல்லும் இந்த தருணத்தில், தேவனுடைய இருதயத்திலிருந்து வரும் இந்த தீர்க்கதரிசன செய்தியை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் அதிக மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் புதிய ஆண்டு, இன்னொரு ஆண்டாக அல்ல; உங்கள் வாழ்வில் புதிய கட்டம் ஆரம்பமாகிறதை, தேவனுடைய ஆசீர்வாதம் நிரம்பி வழியுமளவுக்கு மழையாகப் பொழிகின்ற தருணத்தை குறிக்கிற ஆண்டாக உள்ளது.

"**ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்**" (எசேக்கியேல் 34:26) என்ற வாக்குத்தத்தத்தை தேவன் இந்த ஆண்டில் உங்களுக்காகக் கொடுத்திருக்கிறார்.

இது உங்களுக்கு நன்மையை தருகிற வசனமாகும். உங்கள் துக்கத்தின், பஞ்சத்தின், கலக்கத்தின் நாட்களுக்கு முடிவு வருகிறது. பரிபூரண சந்தோஷத்தின் காலம், சீர்ப்படுத்துதலின் காலம், கனி கொடுப்பதன் காலம் சமீபித்திருக்கிறது. ஆண்டவர் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராயிருக்கிறபடியினால் களிகூருங்கள்!



Dr. பால் தினகரன் - paul@jesuscalls.org

Pauldhinakaranofficial

## ஆசீர்வாதம் நிரம்பி வழியும் காலம்

வேதாகமத்தில் மழையானது, பெரும்பாலும் ஆசீர்வாதத்தை, புதுப்பித்தலை, ஜீவனின் பரிபூரணத்தை குறிக்கிறதாக உள்ளது. பஞ்சத்திற்குப் பிறகு மழையானது வறண்ட நிலத்திற்கு புத்துயிர் அளித்து நம்பிக்கையை தருகிறது. "**நீர் போம், போஜனபானம்பண்ணும், பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது**" (1 இராஜா. 18:41) என்று எலியா தீர்க்கதரிசி கூறுவது வேதத்தில் அருமையாக விவரிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே இந்த 2025-ம் ஆண்டிலும், உங்கள் வாழ்க்கையில் வறண்டு, பலன் கொடாதிருக்கிற எல்லா பகுதிகளிலும் தாம் ஆசீர்வாதத்தை பொழியச் செய்வதாக தேவன் வாக்குப்பண்ணுகிறார். உறவுகள், வேலை, உடல் நலம், ஆவிக்குரிய ஜீவியம் எதுவாக இருந்தாலும் தேவனுடைய ஆசீர்வாதத்தின் மழை பொழிந்து உங்களை புதுப்பிக்கும்; புத்துயிர் அளிக்கும்.

## பஞ்சம் மாறும்; பரிபூரணம் உண்டாகும்

அநேக வேளைகளில் பஞ்சகாலத்தை தொடர்ந்து சம்பூரணம் உண்டாயிருக்கும். எலியாவின் நாட்களில், ஜனங்கள் தேவனை விட்டு தூரமாகப் போய்விட்டபடியினால், தேசத்தில் கொடிய பஞ்சம் உண்டாயிற்று. அவர்கள் உண்மையில்லாதவர்களாக இருந்தபோதிலும், தேவனுடைய இரக்கம் விலகவில்லை. எலியா, ஒருமுறை, இருமுறையல்ல; திடமான விசுவாசத்துடன் ஏழு முறை ஜெபித்தபோது, தேவன் பதிலளித்தார். தேவன், வானத்தை திறந்தார்; பெருமழை பொழிந்தது; பஞ்சம் முடிந்து, தேசம் புத்துயிர் பெற்றது. இந்த 2025-ம் ஆண்டில் உங்கள் வாழ்வில் காணப்படும் எல்லாவித பஞ்சங்களும் முடிந்துபோகும். நீங்கள் சமாதானத்திற்காக, சுகத்திற்காக, காரியங்கள் சீர்ப்படவேண்டும் என்று எதிர்பார்த்திருந்தால், "**வெட்டுக்கிளிகளும்...பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்**" (யோவேல் 2:25) என்று தேவன் வாக்குப்பண்ணுகிறார். அவரை நம்புங்கள். அவர் உங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார்; குறைவை நிறைவாக்குவார்; பஞ்சகாலத்தை, செழிப்பின் காலமாக மாற்றுவார்.

## ஆசீர்வாத மழையைப் பெறுவதற்கான திறவுகோல்

எலியா, விசுவாசம் நிறைந்தவனாய் ஊக்கத்துடன் ஜெபித்ததும் அற்புதங்களை நடந்தன என்று வேதத்தில் பார்க்கிறோம். எலியா, தேவனுடைய வாக்குத்தத்தத்தை உரைத்ததுமே மழை வந்துவிடவில்லை. அவன், தேவனுடைய வாக்குத்தத்தத்தை முழுவதும் நம்பி, முழங்காலிட்டு ஜெபித்து, அவர் கிரியை செய்ய வேண்டும் என்று தொடர்ந்து விசுவாசத்துடன் கேட்டபோது மழை பெய்தது (1 இராஜாக்கள் 18:42).

இந்த ஆண்டில் முழு இருதயத்துடன் தேவனை நீங்கள் தேடினால், உங்கள் வாழ்வில் அவரது கரம் பலமாய் அசைவாடுவதைக் காண்பீர்கள்.

"**நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது**" (யாக்கோபு 5:16) என்று வேதம் உறுதியாய் கூறுகிறது.

தேவன், தம் ஜனங்களின் கூப்பிடுதலுக்கு பதில் அளிப்பதில் பிரியமாயிருக்கிறார் என்று நம்பி, ஊக்கமாக ஜெபித்து உங்களை அர்ப்பணியுங்கள். உங்கள் இருதயம், அவரது சித்தத்துடன் இசைந்திருக்கும்போது, ஏற்றவேளையில் அவர் தம் ஆசீர்வாதங்களை அருளுவார்.

## குடும்பத்தின்மேல் தேவ பாதுகாப்பு

இந்த உலகம் இக்கட்டுகள் நிறைந்தது; எதுவும் நிச்சயமற்ற நிலை கொண்டது. ஆனால், ஆண்டவர் தம் ஜனங்களை தெய்வீக பாதுகாப்பு சூழ்ந்துகொள்ளும் என்று வாக்குப்பண்ணுகிறார். "**பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், கர்த்தர்**




**இதுமுதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார்**" (சங்கீதம் 125:2) என்று வேதம் கூறுகிறது. இந்த வாக்குத்தத்தம் உங்களுக்கு ஆறுதலை தருவதாக. உங்கள்மேலும், உங்கள் பிள்ளைகள்மேலும், உங்கள் அன்பானோர்மேலும் தேவ கரத்தின் பாதுகாப்பு விளங்கும். உங்கள் நற்குணம் அல்லது தகுதியினால் அல்ல, தம்முடைய கிருபையினாலும் உண்மையினாலுமே அவர் உங்களை காக்கிறார். ராகாபை குறித்து வேதத்தில் வாசிக்கிறோம் (யோசுவா 2-ம் அதிகாரம்). ராகாப், பாவத்தில் இருந்தாலும், அவள் தேவனுடைய வல்லமையை நம்பி, விசுவாசத்துடன் செயல்பட்டதால், தேவனிடம் தயவு பெற்றாள். இஸ்ரவேலின் வேவுகாரர்களை அவள் தன் வீட்டினுள் ஒளித்து வைத்தாள். அவளுடைய விசுவாசத்தினால் தேவன் அவளையும் அவள் வீட்டாரையும் பாதுகாத்தார்.

அவ்வாறே நீங்களும், "நான் பாவி. தேவன் என்னை விசாரிப்பதற்கு எனக்கு தகுதியில்லை" என்று எண்ணி, தேவ பாதுகாப்பை பெறுவதற்கு

நீங்கள் அருகதையற்றவர் என்று நினைக்கலாம். ஆனால், ராகாபை தெரிந்துகொண்டதுபோல, தேவன் உங்களையும் தெரிந்துகொண்டிருக்கிறார். நீங்கள் நினைப்பதற்கும் மேலாக அவரது பாதுகாப்பின் கரம் உங்கள்மேல் இருக்கும்; உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் தீங்குக்கு விலக்கி காக்கும்.

### வாழ்க்கை சீர்ப்படும்

தேவனுடைய சீர்ப்படுத்தும் ஆசீர்வாதம், இந்த ஆண்டு உங்கள்மேல் வரும். ஒருவேளை, நீங்கள் உங்கள் அன்பானோரை, வேலையை, சமாதானத்தை இழந்திருக்கக்கூடும். "**நான் அவர்களுக்குக் கீர்த்திபொருந்திய ஒரு நாற்றை எழும்பப்பண்ணுவேன்; அவர்கள் இனி தேசத்திலே பஞ்சத்தால் வாரிக் கொள்ளப்படுவதுமில்லை, இனிப் புறஜாதிகள் செய்யும் அவமானத்தைச் சுமப்பதுமில்லை**" (எசேக்கியேல் 34:29) என்று தேவன் வாக்குப்பண்ணுகிறார்.




தேவன் தனக்குச் செழிப்பை அளிக்கும்வரைக்கும் ஈசாக்கு எதிர்ப்புகளின் மத்தியில் தொடர்ந்து துரவுகளை வெட்டிக்கொண்டே இருந்தான் (ஆதியாகமம் 26:22). நீங்களும் அவ்வாறே வாழ்க்கையில் நல்ல திருப்பங்களை காண்பீர்கள். உங்களிடமிருந்து எடுக்கப்பட்டதை தேவன் திரும்ப தருவார்; அவற்றை மிகுதியாய் பெருகப்பண்ணுவார்.

### சவால்கள், எதிர்ப்புகள்மேல் வெற்றி

சவால்களும் எதிர்ப்புகளும் எழும்பலாம். ஆனால், தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக யுத்தம் செய்வார் என்பதை மறவாதிருங்கள்.

"**கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்**" (யாத்திராகமம் 14:14) என்று வேதம் கூறுகிறது.

சேலத்தைச் சேர்ந்த ராமசாமி என்ற அன்பு சகோதரரின் சாட்சியை உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன். அவர் விவசாயி. பள்ளியில் படித்த அவரது மகள் பொல்லாத ஆவியின் பிடியில் சிக்கியிருந்தாள். இயேசு அழைக்கிறார் ஊழியத்தை அவருக்கு யாரோ ஒருவர் அறிமுகம் செய்தார். அவர்கள் நாங்கள் நடத்திய பிரார்த்தனை கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டார்கள். நாங்கள் ஜெபித்தபோது, பிசாசுகள் மகளை விட்டு ஓடிப்போயின. அவள் விடுதலை பெற்றாள். இந்த அற்புதத்தைக் கண்ட அவர் குடும்பமாக தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு அர்ப்பணித்தார்கள். இதனால் அவர்களது உறவினர்கள், ஆஸ்திகளையும் வீட்டையும் விட்டு அவர்களை துரத்திவிட்டனர். சகோதரர் ராமசாமி, மனைவியுடனும் மகளுடனும், அவரது மனைவியின் பெற்றோருடன் வாழ வேண்டியதாயிற்று. ஆனாலும், இயேசு அழைக்கிறார் ஊழியத்தில் ஏறெடுக்கப்பட்ட ஜெபம், தொடர்ந்து அவருக்கு ஆறுதலாக விளங்கி வந்தது.

அவர் தன் நிலத்தை பயன்படுத்த அற்புதவிதமாக தேவன் உதவி செய்தார். அவர் பயிரிடவும், கரும்பு விளைவிக்கவும் தொடங்கினார். அதே சமயத்தில், மற்றவர்களுக்கு நாங்கள் ஜெபிக்க உதவும்படி அவர் இயேசு அழைக்கிறார் வணிக ஆசீர்வாத திட்டத்திலும் இணைந்தார். அவர் செய்த விவசாயத்தில் தேவ ஆசீர்வாதம் பொழிந்தது. கரும்பு, மஞ்சள், நாட்டுச் சர்க்கரை என்று அவர் கொண்டு சென்ற பொருள்களுக்கு சந்தையில் நல்ல வரவேற்பு கிடைத்தது. தேவன் அவரை அளவில்லாமல் ஆசீர்வதித்தார்; அவரை துரத்திவிட்ட உறவினர்களைக் காட்டிலும் அவருக்கு அதிக வருமானம் கிடைத்தது. ஆம், அன்பானவர்களே, இயேசுவின்மேல் கொண்டிருந்த விசுவாசத்தின் காரணமாக, அவரை ஒடுக்கியவர்களைக் காட்டிலும் தேவன் அவரை பெலப்படப் பண்ணினார். ஆண்டவர் உங்களுக்கும் அப்படியே செய்வார். அவர், தடைகள் எல்லாவற்றையும் தமது மகிமை விளங்குவதற்கான வாய்ப்புகளாக மாற்றுவார். எதிர்ப்புகளின் மத்தியில் அவர் நூறுமடங்கு பலனை ஈசாக்குக்கு அருளி அவனை ஆசீர்வதித்ததுபோன்று, உங்களையும் ஆசீர்வதிப்பார்; ஏற்ற காலத்தில் தம் மழையை அனுப்புவார்.

### நீங்கள் விசுவாசித்தால் அற்புதங்கள் தொடரும்

"**மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும்**" (மத்தேயு 19:26) என்று இயேசு கூறுகிறார். அற்புதங்கள் நடப்பதற்கான வாசல்களை விசுவாசமே திறக்கிறது என்று இந்த வசனம் வெளிப்படுத்துகிறது. சுப்பிரமணியன் என்ற அன்பு சகோதரர் கூறிய சாட்சியை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். அவருக்கு இருதயத்தில் பாதிப்பு இருப்பதாகவும், அறுவைசிகிச்சை செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டது. இதனால் அவர் கவலையுற்றார். அவர், தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துகொண்டிருந்தபோது, தேவ செய்தியை கொடுத்துக்கொண்டிருந்த

நான், இருதய நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தோருக்காக குறிப்பாக ஜெபித்துள்ளேன். பரிசுத்த ஆவியானவர், சகோதரர் சுப்பிரமணியை ஏவியபடியினால், அவர், ஆண்டவர் தன் வாழ்வில் ஓர் அற்புதத்தை செய்வார் என்று விசுவாசித்து, என்னுடன் இணைந்து ஜெபித்துள்ளார். சிகிச்சைக்காக வேலூரிலுள்ள சிஎம்சி மருத்துவமனைக்கு சென்றபோதும் அவர் உள்ளத்தில் தேவன்மேல் அதிக விசுவாசம் இருந்துள்ளது. அவர், "சகோதரர் பால் தினகரன் என்னுடைய இந்த பிரச்னைக்காக குறிப்பாக ஜெபித்திருக்கிறார். தேவன் என்னை தொட்டு சுகப்படுத்தியிருக்கிறார் என்று நான் நம்புகிறேன்" என்று தனக்குள் எண்ணியிருக்கிறார். மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டபோதும், தேவன்பேரில் திடவிசுவாசத்துடன் இருந்துள்ளார். "ஆண்டவரே, நீர் என்னை குணப்படுத்திவிட்டீர் என்று விசுவாசிக்கிறேன். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்வதற்கான தேவை இருக்காது என்று நம்புகிறேன். இந்த அற்புதம் நடந்தால், அறுவை சிகிச்சைக்கு செலவழிக்கவேண்டிய தொகையை உம்முடைய ஊழியத்திற்குக் கொடுக்கிறேன்" என்று மௌனமாக ஜெபித்துள்ளார். அவர் ஜெபித்தவாறே, தேவன் ஆச்சரியமானவிதத்தில் கிரியை செய்துள்ளார். பரிசோதனைகளை செய்த மருத்துவர்கள், வியப்புடன், "உங்கள் உடலில் எந்தப் பாதிப்பும் இல்லை. நீங்கள் வீட்டுக்குச் செல்லலாம்; அறுவை சிகிச்சை அவசியம் இல்லை" என்று கூறியுள்ளனர். மிகுந்த நிம்மதியடைந்த சகோதரர் சுப்பிரமணியன், அற்புத சுகத்தைக் கொடுத்த தேவனை நன்றியுடன் மகிமைப்படுத்தினார். தம்முடைய பொருத்தனையை நிறைவேற்றும்வண்ணம் நிலத்தின் முதற்கனிகளுடன் அவர் ஊழியத்திற்கு காணிக்கையும் கொண்டு வந்தார். அவரது குடும்பத்தினர் அனைவரும் களிகூர்ந்தனர்; ஆண்டவரின் தயவை எண்ணி அவர்கள் அனைவரின் உள்ளங்களும் நன்றியால் நிறைந்தது.

தேவனால் உங்களுக்கும் இப்படி செய்ய முடியும். முடியாதவற்றையும் செய்து முடிக்கக்கூடிய தேவ வல்லமையை இந்த ஆண்டில் விசுவாசியுங்கள். சுகத்திற்காக, தேவைகள் சந்திக்கப்பட, வாழ்வில் திருப்பம் ஏற்பட நீங்கள் ஜெபித்துக்கொண்டிருந்தால் விசுவாசமாயிருங்கள். தேவன் உங்கள் வாழ்வில் அற்புதங்களைச் செய்யவேண்டுமென்று, அவரது அளவற்ற வல்லமையின்மேல் நம்பிக்கை வைத்து கேளுங்கள்; தேடுங்கள்; தட்டுங்கள். இப்படி நீங்கள் அவரது வாக்குத்தத்தங்களை நம்பினால், அற்புதங்கள் உங்களைத் தொடரும்.

### தேவன் தம் ஆவியை ஊற்றுகிறார்

தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவரை நம்மேல் ஊற்றுவது பெரிதான ஈவாகும். அது, உலகப்பிரகாரமான எல்லா ஆசீர்வாதங்களுக்கும் மேலானது. "**கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்**" (அப்போஸ்தலர் 2:17) என்று வேதம் கூறுகிறது.

2025-ம் ஆண்டில், தேவனுடைய நோக்கத்தில் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் நடக்கும்படி தேவ ஆவியானவர் உங்களைப் பெலப்படுத்துவார். தேவனுடைய ராஜ்யத்திற்கென புதிய வாய்ப்புகளை நீங்கள் முயற்சிப்பதால் பரிசுத்த ஆவியானவர் உங்களை வழிநடத்துவார்.

### மாறாத பிரசன்னமாகிய பாக்கியம்

"**என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர்; நான் உங்கள் தேவன்**"




(எசேக்கியேல் 34:31) என்று தேவன் உறுதியாகக் கூறுகிறார்.

நீங்கள் தமக்குச் சொந்தமானவர் என்பதை இந்த ஆண்டு தேவன் உலகத்திற்குக் காட்டுவார். அவரது ஆசீர்வாதங்கள் உங்கள் தேவைகளை சந்திக்கக் கூடியதாக மட்டுமல்ல; நிரம்பி வழிந்து, மற்றவர்களுக்கும் அவரது நன்மையையும், ஆசீர்வாதங்களையும் கொண்டு சேர்க்கிறவர்களாக நீங்கள் விளங்கும்படி செய்யும். உங்கள் இருதயத்தை அவருக்குத் திறக்கும்போது, அவர் அமர்ந்த தண்ணீர்களண்டையில் உங்களை நடத்தி, உங்கள் ஆத்துமாவை தேற்றுவார் (சங்கீதம் 23:3).

### சீர்ப்படுத்துதல் என்னும் பாக்கியம்

சரியாக புரிந்துகொள்ளா நிலையும் பிரிவினையும் காணப்படும் உலகில், குடும்பங்களை தம்முடைய அன்பினால் பிணைத்துக் கட்டுவதற்கு தேவன் விரும்புகிறார். உறவுகள் பிரிந்தநிலையில், முரண்பாடுகள் காணப்பட்டால், அவர் அந்த முறிவை

குணப்படுத்தி சீர்ப்படுத்துவார் என்று நம்புங்கள். "**அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளி டத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர் கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்**" (மல்கியா 4:6) என்று வேதம் வாக்குப்பண்ணுகிறது. தேவ அன்பு, உங்கள் வீட்டில் ஒற்றுமையும் சமாதானத் தையும் அளித்து, ஒருமனமும் சந்தோஷமும் நிலவும் இடமாக அதை மாற்றும்.

### கனிநிறைந்த காலம்

இந்த ஆண்டு, கனிநிறைந்ததாக அமையும். "**நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது**" (யோவான் 15:5) என்று இயேசு கூறுகிறார். நீங்கள் தேவனோடு இணைக்கப்பட்டவர்களாய், அவரிடமிருந்து பெலனை யும் ஞானத்தையும் பெற்றுக்கொள்ளும்போது, உங்கள் வாழ்வு அவரது மகிமைக்காக கனிகொடுக் கிறதாக அமையும்.

### காத்திருக்கும் ஆசீர்வாதமான மழை

புத்தாண்டினுள் விசுவாசமும் எதிர்பார்ப்பும் நிறைந்த இருதயத்துடன் செல்லுங்கள். "**தங்கள் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் தங்களோடே இருக்கிறதையும்... அவர்கள் அறிந்துகொள்வார்க ளென்று ...சொல்லுகிறார்**" (எசேக்கியேல் 34:30) என்று வேதம் நமக்கு நினைவுப்படுத்துகிறது.

வழியில் எந்த சவால் எதிர்ப்பட்டாலும், உங்களைப் பாதுகாக்கும்படியும், தம்முடைய ஆசீர்வாதமான மழையை உங்கள்மேல் பொழியப்பண்ணும்படியாக வும் தேவன் உங்களுக்கு முன்னே போகிறார். அவருடைய கிருபையை நம்புங்கள்; அப்பொழுது, அவரது வல்லமையுள்ள கரம் செயல்படுவதை நீங்கள் காண்பீர்கள்.

2025-ம் ஆண்டானது சந்தோஷம் நிரம்பி வழிகிற தாகவும், சீர்ப்படுத்துகிறதாகவும், உங்களுக்கும் உங்கள் அன்பானோருக்கும் தெய்வீக தயவு கிடைப் பதாகவும் அமையட்டும். தேவனுக்கு உங்கள் இருத யத்தை திறந்து கொடுங்கள். அவர் உங்களுக்குள் வாசம்பண்ணுவார்; உங்களை வழிநடத்துவார்; பூரணமாய் ஆசீர்வதிப்பார்.

**ஜெபம்: அன்புள்ள ஆண்டவரே, 2025-ம் ஆண்டுக்கென்று நீர் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தத்திற்காக உம்மை ஸ்தோத் திரிக்கிறோம். ஆண்டவரே, மழையைப் பெய்யப்பண்ணும்படி உம்மை நோக்கிக் கூப்பிடுகிறோம். ஆசீர்வாதமான மழையை எங்கள்மேல், எங்கள் குடும்பங்கள்மேல், உலகம் முழுவதும் இருக்கும் எங்கள் ஜனங் கள்மேல் பொழிந்தருளும். இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளங்களின் மூலமாக வும் அதிசயங்கள் மூலமும் உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும். ஆண்டவரே, பரலோகத்தை திறந்திடும்; தேசங்கள்மேல் உம்முடைய நீதியான ஆளுகையை விளங்கப்பண்ணும் என்று இயேசுவின் வல்லமையான நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.**






பங்காளர் கூட்டம்

# ஆந்திர பிரதேசத்தில் வல்லமையான ஊழியம்










**2024 டிசம்பர் 6 மற்றும் 7ம் தேதிகளில் Dr. பால் தினகரனும் சகோதரி இவாஞ்சலின் பால் தினகரனும் ஆந்திர பிரதேச மாநிலத்தில் ஊழியம் செய்தார்கள்.**

**பங்காளர் கூட்டம்:** ராஜமுந்திரியில் பங்காளர் கூட்டம் நடைபெற்றது. உற்சாகமாய்க் கொடுக்கிறதைக் குறித்து, 2 கொரிந்தியர் 9:7-ம் வசனத்தின் அடிப்படையில் Dr. பால் தினகரன் செய்தியளித்து, அவ்வாறு கொடுக்கிறவர்களை தேவன் நேசிக்கிறார் என்பதை விளக்கினார். மற்றவர்களுக்காக ஏறெடுக்கும் ஜெபமானது தேவனுக்கு சுகந்தவர்க்கமாய் இருப்பதால், அனைவரும் பிறருக்காக ஜெபிக்கவேண்டும் என்றும், அவ்வாறு ஜெபிக்கும்போது தேவன் நம் இருதயங்களை எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்றும் பகிர்ந்துகொண்டார். சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், நீதிமான்களுக்கு தேவன் அளிக்கும் பலன் குறித்து செய்தியளித்தார். இழந்த ஆசீர்வாதங்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காகவும், வந்திருந்த பங்காளர்களின் வாழ்வில் தேவன் இடைப்படவேண்டும் என்றும் அவர் ஜெபித்தார்.

**தனுக்கு பிரார்த்தனை திருவிழா:** தனுக்குவில் நடந்த பிரார்த்தனை திருவிழாவில் Dr. பால் தினகரனும் சகோதரி இவாஞ்சலின் பால் தினகரனும் வல்லமையாக ஊழியம் செய்தனர். சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், கூடி வந்திருந்த மக்களின் உள்ளங்களிலும் குடும்பங்களிலும் கிறிஸ்துவின் சந்தோஷ ஊற்று பெருக்கெடுத்து ஓடவேண்டும் என்று ஜெபித்தார். Dr. பால் தினகரன், ஏசாயா 7:10 என்ற வசனத்தின் அடிப்படையில் செய்தியளித்து, தேவன் மக்களுக்கு ஓர் அடையாளத்தை காண்பித்து, அவர்கள் வாழ்வில் நடக்க இயலாமல் இருக்கும் காரியங்களை செய்து முடிப்பார் என்று விளக்கினார். இந்த பிரார்த்தனை திருவிழாவில் தேவ சந்தோஷமும் பிரசன்னமும் நிறைந்திருந்தது.

**ஞாயிறு ஆராதனைகள்:** Dr. பால் தினகரன், பிரதரன் ஆலயத்தில் பிரசங்கித்து, சபையினர் கனவீனத்திற்குப் பதிலாக, தேவனுடைய சுதந்தரத்தைப் பெற்று களிகூரும்படி ஆசீர்வதித்து ஜெபித்தார். சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், ஷாலோம் திருச்சபையில் செய்தியளித்து, சபையினர் உபத்திரவங்களை சகித்து, கழுகுகளைப் போல எழும்ப வேண்டும் என்று உள்ளமுருக பிரார்த்தனை செய்தார்.





ஞாயிறு ஆராதனைகள்




தனுக்கு பிரார்த்தனை திருவிழா





ஊழியத்தில் வல்லமையான அற்புதங்கள்





# உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...

கிறிஸ்துவுக்குள் என் அன்பு ஊழியப்பங்காளருக்கு,

புத்தாண்டுக்குள் நுழைகிற இந்த தருணத்தில் சந்தோஷத்துடன் உங்களை வாழ்த்துகிறேன். உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் 2025 புத்தாண்டு மகிழ்ச்சியானதாகவும், ஆசீர்வாதமானதாகவும் அமைவதாக.

நாம் இணைந்து ஆண்டவருக்கு ஊழியம் செய்து கடந்து வந்த பாதையை திரும்பி பார்க்கும்போது, "**நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்**" (எசேக்கியேல் 34:26) என்ற வாக்குத்தத்தம் எனக்கு நினைவு வருகிறது.

அடுத்து நாம் எதிர்கொள்ளப்போகிற நாட்களைக் குறித்து இந்த வசனம் தீர்க்கதரிசனமாக உரைக்கிறது. 2025-ம் ஆண்டை ஆசீர்வாதமான மழையின் ஆண்டு என்று ஆண்டவர் அறிவித்துள்ளதாக ஆவியில் ஆழமாக உணருகிறேன். மழையானது பூமியை செழிக்கப் பண்ணி, விதையை முளைவிட்டு, கனிகொடுக்கச் செய்வதுபோல ஆண்டவர் உங்கள் வாழ்க்கையில், உங்கள் குடும்பத்தில், உங்கள் ஊழியத்தில் தமது ஆசீர்வாதத்தைப் பொழியப்பண்ணுவார்.

நீங்கள் தமக்கு உண்மையோடும், அன்போடும் ஊழியம் செய்து வருவதை ஆண்டவர் காண்கிறார். உங்கள் பிரயாசத்தை அவர் மறந்துபோகவில்லை. அவர் பொழியப்பண்ணுகிற ஆசீர்வாதமான மழை உங்கள் ஆவியைப் புதுப்பிக்கும்; பாரங்களை அகற்றும். உங்கள் வாழ்வில் வறண்டு, பலன் கொடுக்காமலிருக்கும் பகுதிகளில் ஜீவன் உண்டாகும்படி செய்யும். அவர் பொழியப்பண்ணும் மழை கடினமான பூமியை மிருதுவாக்கும்; எல்லைகளை உடைக்கும்; அவரது மகிமைக்கென திரளான அறுவடையை கொண்டுவரும்.

அவரது ஆசீர்வாதங்கள் உங்கள் தேவைகளை சந்திப்பதோடு, உங்களைச் சுற்றியிருப்பவர்களின் வாழ்க்கையையும் ஆசீர்வதிக்கும் விதத்தில் நிரம்பிவழியும் என்று நாம் விசுவாசித்து இணைந்து நடப்போம். வானங்கள் திறந்திருக்கின்றன. ஆண்டவர் தம் தயவை உங்கள்மேல் பொழியப்பண்ண ஆயத்தமாயிருக்கிறார். ஆகவே தைரியமாயிருங்கள்.

இது, ஆண்டவரின் நன்மையையும், அவரது வசனம் ஆச்சரியமான விதத்தில் நிறைவேறுவதையும் கண்டு களிகூரும் ஆண்டாக அமையும்.

## 2024-ம் ஆண்டு ஊழியத்தில் நடந்த விசேஷித்த காரியங்கள்


கடந்த ஆண்டு ஆண்டவர் இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் மூலம் செய்த மகத்தான காரியங்களை நன்றி நிறைந்த இருதயத்துடன் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். உங்கள் ஜெபம் மற்றும் ஆதரவின் மூலம் கணக்கற்ற மக்கள் தொடப்பட்டுள்ளனர். கோடிக்கணக்கானோர் இழந்த நம்பிக்கையை திரும்ப பெற்றுள்ளனர்.

## ஜெபகோபுர ஊழியம்

**"உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்;..."**
**(இராஜாக்கள் 20:5)**

நம் வாழ்வின் இருள் சூழும் தருணங்களில் ஆண்டவர் அற்புதவிதமாக இடைப்படுவாரா என்று அவரது ஆறுதலுக்காக ஏங்கி அவரைத் தேடுகிறோம். இதுபோன்று வேதனையாலும், வருத்தங்களாலும் பாரப்படுகிறவர்களுக்காக இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரங்களில் வேண்டுதல்கள் ஏறெடுக்கப்படுகின்றன.













இந்தியாவில் அமைந்துள்ள 106 ஜெபகோபுரங்கள் மூலம் கடந்த ஆண்டு 18,44,476 பேருக்கு நேரடி ஜெபம் ஏறெடுக்கப்பட்டுள்ளது. ஜெபகோபுரங்களில் நடத்தப்பட்ட ஆசீர்வாதக் கூட்டங்களில் 15,92,604 பேர் கலந்துகொண்டு பாக்கியம் பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு மக்கள் 10,20,800 ஜெப எண்ணெய் குப்பிகளை விசுவாசத்துடன் வாங்கிச் சென்று பயன்படுத்தியுள்ளனர்.

அர்ப்பணிப்புடன் ஊழியம் செய்யும் ஜெபவீரர்களின் சேவையால் இவை அத்தனையும் நடந்துள்ளன. கடந்த ஆண்டு 20,157 ஜெப வீரர்கள் மற்றவர்களுக்காக மன்றாட நேரம் ஒதுக்கி ஜெபித்துள்ளனர். இந்த உன்னதப் பணியில் தன்னார்வ ஜெபவீரர்களும் தங்களை அர்ப்பணித்து இணைந்து செயல்பட்டனர்.

கடந்த ஆண்டு 7,41,118 பங்காளர்களை அவர்களது பிறந்தநாள், திருமணநாளின்போது தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வாழ்த்தி ஜெபித்துள்ளோம். இவ்விதத்தில் தொலைதூரத்தில் இருப்பவர்களுக்கும் அன்பை பகிர்ந்துகொண்டு ஆண்டவரிடமிருந்து ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறோம்.

HBR Layout (பெங்களூரு), திருப்பதி (ஆந்திரபிரதேசம்), ஜக்தல்பூர் (மத்திய பிரதேசம்) ஆகிய மூன்று இடங்களில் மக்களின் வசதிக்காக ஜெபகோபுரங்களை புதிதாக தொடங்கியிருக்கிறோம். தேவநாம மகிமைக்காக தொலைதூரத்தில் இருக்கும் மக்களுக்கும் ஊழியம் செய்யும்படி 190 மிஷன் நெட்வொர்க் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன.

உங்களுக்கும் வழிகாட்டுதல், ஆறுதல், சுகம் தேவைப்படுமாயின் உங்களுக்காக ஜெபிக்க இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம் இருக்கிறது என்பதை மறந்துபோகாதிருங்கள். உங்கள் வாழ்வில் நம்பிக்கையையும், சீர்ப்படுத்துதலையும் பெறுவதற்கு ஜெபகோபுரம் உதவி செய்யும்.

## தொலைபேசி ஜெபகோபுரம்

**"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்"** **(எரேமியா 33:3)**

ஜெப தேவை உள்ளவருக்காக தொலைபேசி ஜெபகோபுரம் எல்லா நாளும் இரவும் பகலும் (24/7) செயல்படுகிறது. அதன்வழியாக தேவன் ஜனங்களை தொடுகிறார். கடந்த ஆண்டில் மட்டும் 39,60,000 மக்கள் ஜெப உதவிக்காக தெலைபேசி ஜெபகோபுரத்தை தொடர்புகொண்டிருக்கிறார்கள். தமிழ், ஆங்கிலம், மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஹிந்தி, மராத்தி ஆகிய ஏழு மொழிகளில் ஜெப உதவி வழங்கப்படுகிறது.

இடையறாது தியாகத்துடன் இந்த ஊழியத்தில் இணைந்து ஜெபிக்கும் தன்னார்வ ஜெப வீரர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். அவர்கள் உதவியினால்தான் முழு நேரமாக தொலைபேசி ஜெபகோபுர ஊழியத்தை செய்ய முடிகிறது. உங்களுக்கு ஜெப தேவைகள் ஏதேனும் இருப்பின் தயங்காமல் எங்களை தொடர்புகொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்க நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம்.

கடந்த ஆண்டு தங்கள் வாழ்வின் இக்கட்டான தருணங்களில், 86,883 பேர் Dial A Prayer என்ற பதிவு செய்யப்பட்ட பிரார்த்தனை சேவையை பயன்படுத்தி தைரியம் பெற்றுள்ளனர். நீங்களும் இதுபோன்று தொலைபேசி மூலம் எங்களை தொடர்புகொண்டு ஆசீர்வாதம் பெறலாம்.

### ஆசீர்வாதக் கூட்டங்கள்

**“கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்” (எண்ணாகமம் 6:24,25)**

2024-ம் ஆண்டு நடந்த இயேசு அழைக்கிறார் கூட்டங்கள் எல்லாவற்றிலும் தமது பிரசன்னம் விசேஷித்தவிதத்தில் விளங்கும் படி தேவன் செய்ததை எண்ணிப்பார்க்கும்போது ஆசீர்வாதமாக உள்ளது. புத்தாண்டு ஆசீர்வாதக் கூட்டம் முதல் இயேசு அழைக் கிறார் பிரார்த்தனை திருவிழாக்கள், குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்கள் மாதம் ஒருமுறை நடக்கும் அற்புத உபவாச ஜெபங்கள் U-Turn கூட்டங்கள், பங்காளர் கூட்டங்கள், போதகர் கூட்டங்கள் என இந்தியா முழுவதும் பல்வேறு நகரங்களில் நடந்த கூட்டங்கள் மூலம் லட்சக்கணக்கானோர் தேவனுடைய வார்த்தையின் வல்லமையை அனுபவித்துள்ளனர். அநேகருக்கு இது வாழ்வை மாற்றும் அற்புதமான தருணமாக அமைந்தது. கடந்த ஆண்டில் சென்னை, ஹைதராபாத்-கச்சிபௌலி, செகந்திராபாத், இட்டாநகர்-அருணாச் சலப் பிரதேசம், காக்கிநாடா, பாபட்லா (ஆந்திர பிரதேசம்), சிக்கிம் மாநிலம், பெங்களூரு, விஜயவாடா, திருப்பதி (ஆந்திர பிரதேசம்), ஸ்ரீவில்லிபுத்தூர், அமலாபுரம் (ஆந்திர பிரதேசம்), நாகர்கோவில், நாலுமாவடி, திருநெல்வேலி, மைசூரு, மங்களூரு, கூத்தி (Gooty) (ஆந்திர பிரதேசம்), புதுச்சேரி, தனுக்கு (ஆந்திர பிரதேசம்), ராஞ்சி ஆகிய பட்டணங்களில் பிரார்த்தனை திருவிழாக்கள் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டங்கள் மூலம் 15,92,604 மக்கள் தேவ ஆசீர்வாதத்தை அனுபவித்து அற்புதங்களைப் பெற்றுள்ளனர். ஜெபகோபுரங்களில் நடந்த உபவாச ஜெபங்கள், அற்புத உபவாச ஜெபம், ஆகியவற்றில் கலந்துகொண்ட 2,49,652 மக்களுக்கு கூட்டத்தின் இறுதியில் ஆவிக்குரிய உணவுடன், சரீரப்பிரகாரமான உணவும் வழங்கப் பட்டது. இந்தியா முழுவதும் 100 பட்டணங்களில் 72 மணி நேர தொடர் பிரார்த்தனை நடத்தப்பட்டது. ஆண்டவரால் வழிநடத்தப் பட்டபடி நானும், என் குடும்பத்தினரும் சென்னை, புவனேஸ்வரம் (ஒடிசா), கொல்கத்தா (மேற்கு வங்காளம்), ஹைதராபாத் (தெலுங்கானா). விஜயவாடா (ஆந்திர பிரதேசம்), அகமதாபாத் (குஜராத்), பெங்களூரு (கர்நாடகா), மும்பை (மகாராஷ்டிரா) ஆகிய இடங்களுக்கு கடந்து சென்று பிரார்த்தனை நடத்தினோம். இந்த பிரார்த்தனையில் 2,730 திருச்சபைகளின் மக்கள் தங்கள் போதகருடன் வந்து கலந்துகொண்டு தேசத்திற்காக ஊக்கமாக ஜெபித்தனர். இதுபோன்று நாங்கள் நடத்தும் கூட்டங்களில் தொடர்ந்து பங்கு பெற்று அற்புதங்களை அனுபவியுங்கள்.

### தேசிய ஜெபகோபுரம்


**“நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்” (1 தீமோத்தேயு 2:1)**

கடந்த ஆண்டு டெல்லியில் அமைந்துள்ள தேசிய ஜெபகோபுரத் திற்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஜெபவீரர்கள் தன்னார்வமாக வந்து தேசத்திற்காக 8,760 மணி நேரம் ஜெபித்துள்ளனர். இந்த தன்னார்வ ஜெபவீரர்கள் தேவனுடைய தயவும், ஆசீர்வாதமும், சமாதானமும் நம் தேசத்தில் விளங்கும்படி 24 அணிகளாக தீர்க்கதரிசன பிரார்த்தனை ஏறெடுத்துள்ளார்கள்.









### ஸ்தானாபதி ஊழியம்

**“உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக் கடவர்கள்” (யாக்கோபு 5:14)**

இயேசு அழைக்கிறார் ஊழிய ஸ்தானாபதிகள் மாதந்தோறும் நம் பங்காளர் இல்லங்களைச் சந்தித்து, அவர்களுக்காக ஜெபிப்பதோடு, நம் ஊழியத்தின் பல்வேறு சேவைகளை அவர்க ளுக்கு அறிமுகம் செய்து, அவர்களை ஊழியத் துடன் இணைக்கின்றனர். கடந்த ஆண்டில் மட்டும் 1,500 தன்னார்வ ஸ்தானாபதிகள் இணைந்துள்ளனர். மொத்தத்தில் 38,000 குடும்பத்தினரை ஸ்தானாபதிகள் சந்தித்து இயேசுவின் அன்பையும் சமாதானத்தையும் பகிர்ந்துகொண்டுள்ளனர். ஆண்டவரின் பணி யில் இத்தனைபேர் இணைவது உண்மை யாகவே ஊக்கம் அளிக்கிறது.

### தொலைக்காட்சி ஊழியம்

**“ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோ கமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சி யாகப் பிரசங்கிக்கப்படும்” (மத்தேயு 24:14)**

இந்தியா முழுவதும் அநேக இல்லங்களுக்கு நம் தெலைக்காட்சி நிகழ்ச்சிகள் சென்றடைகின் றன. தேவன் அருளும் சுகத்தையும், அற்புதத் தையும் ஏராளமானோர் அனுபவிக்கின்றனர். தமிழ், மலையாளம், ஹிந்தி, தெலுங்கு மற்றும் கன்னடம் ஆகிய 5 மொழிகளில் நம் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாவதோடு, நேரலை நிகழ்ச்சிகள் மூலமாகவும் ஊழியம் செய்கிறோம்.

ஃபேமிலி சேனலில் நமது தமிழ் நிகழ்ச்சி கள் 24 மணி நேரமும் ஒளிபரப்பாகின்றன. கூடுதலாக 9 தொலைக்காட்சி அலைவரிசைகள்



மூலமாகவும் உலகமெங்கும் பல்லாயிரக்கணக்கான குடும்பத்தினர் நம் நிகழ்ச்சிகளை பார்க்கின்றனர். வாரந்தோறும் நடக்கும் நேரலை நிகழ்ச்சிகளில் மக்கள் நேரடியாக தொடர்பு கொண்டு, ஜெபிக்க கேட்டுக் கொள்வதால் அது பெருத்த ஆசீர்வாதமாக அமைகிறது. ஹிந்தியில் ColorsRishtey தொலைக்காட்சி வாயிலாகவும், கன்னடத்தில் Colors Super தொலைக்காட்சி வாயிலாகவும் புதிதாக நிகழ்ச்சிகளை ஒளிபரப்பத் தொடங்கியுள்ளோம். கடந்த ஆண்டு ஃபேமிலி சேனல் வாயிலாக வழங்கப்படும் தமிழ் நிகழ்ச்சிகளுடன் மற்ற தொலைக்காட்சிகளில் 415 தமிழ் நிகழ்ச்சிகள் 730 மலையாள நிகழ்ச்சிகள், 609 ஹிந்தி நிகழ்ச்சிகள், 780 தெலுங்கு நிகழ்ச்சிகள், 381 கன்னட நிகழ்ச்சிகள் இந்தியாவிலும், அயல்நாடுகளிலும் பல இலட்சம் மக்களை சென்றடைந்துள்ளன.

பெண்கள் மற்றும் குடும்பங்களுக்கென்று 'நீ உயரும் காலம்' என்ற புதிய நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இல்லற வாழ்வில் காணும் பிரச்சனைகளை கடந்துசெல்ல உதவும்படி தம்பதியருக்கென்று விசேஷமாக 'அன்பு' (Love) என்ற நிகழ்ச்சியை ஆரம்பித்துள்ளோம்.

பெண்களை வேத வசனத்தின் மூலமும், தேவனை அறிகிற அறிவின் மூலமும் பெலப்படுத்தும்படி 'மங்கையர் நேரம்' என்ற சிறப்பு நிகழ்ச்சியை ஆரம்பித்துள்ளோம்.

### டிஜிட்டல் மீடியா ஊழியம்

**"ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்" (சங்கீதம் 96:3)**

தேவனுடைய கிருபையால் நமது சமூக ஊடக ஊழியம் அநேகரை தொட்டுள்ளது.

**ஃபேஸ்புக்:** எல்லா மொழிகளிலும் நமது ஃபேஸ்புக் பதிவுகள் 86,28,302 முறை பார்க்கப்பட்டுள்ளன.

**இன்ஸ்டாகிராம்:** இன்ஸ்டாகிராமில் நாம் செய்யும் பதிவுகள் 50,43,707 முறை பார்க்கப்பட்டுள்ளன.

**X(Twitter):** நமது எக்ஸ் தள பதிவுகள் 8,16,000 முறை பார்க்கப்பட்டுள்ளன.

**யூடியூப்:** எல்லா மொழிகளிலும் நமது யூடியூப் வீடியோக்கள் 64,72,79,430 முறை பார்க்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உலகமெங்கும் தமது சுவிசேஷத்தை அறிவிக்க உதவிவரும் ஆண்டவருக்கு நன்றி தெரிவிப்போம்.

### பாடல் ஊழியம்

**"கர்த்தரின் கிருபைகளை என்றென்றைக்கும் பாடுவேன்; உமது உண்மையைத் தலைமுறை தலைமுறையாக என் வாயினால் அறிவிப்பேன்" (சங்கீதம் 89:1)** என்று சங்கீதக்காரன் கூறுகிறான்.

உங்களுக்கும், உங்கள் அன்பானோருக்கும் நமது பாடல் ஊழியம் ஆசீர்வாதமாயிருக்கும் என்று நம்புகிறேன். பல்வேறு மொழிகளில் உள்ள நம் பாடல்களை 91,24,08,540-க்கும் மேற்பட்டோர் கேட்டுள்ளனர்; அவர்கள் வாழ்வில் தேவபிரசன்னம் இறங்கி உள்ளது. 2025-ம் ஆண்டுக்கான வாக்குத்தத்தப் பாடல் வெளியாகியுள்ளது. அனைத்து சமூக ஊடக தளங்களிலும் அதைப்பார்த்து, வாக்குத்தத்தங்களை உரிமையாக்கி, தேவனுடைய ஆசீர்வாதமான மழையை உங்கள் வாழ்வில் அனுபவிக்கும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

### கடித ஊழியம்

**"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலிப்பியர் 4:6)**

கடந்த ஆண்டு மின்னஞ்சல், கடிதங்கள், சமூக ஊடகம் வழியாக 3,63,273 ஜெப விண்ணப்பங்கள் வந்துள்ளன. தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், மலையாளம், ஹிந்தி, கன்னடம் மற்றும் குஜராத்தி மொழிகளில் 3,53,081 பதில் கடிதங்களை அனுப்பியுள்ளோம்.


அநேகர் திருமணம், வேலை, தொழில் உள்ளிட்ட பல காரியங்களில் தேவனுடைய சித்தத்தை அறியவும், பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலை நாடியும் விண்ணப்பங்களை எழுதுகின்றனர். நான் அவர்களுக்காக ஆண்டவருடைய பாதத்தில் காத்திருந்து ஜெபித்து, பதில் எழுதி, முடிவுகளை எடுக்க உதவுகிறேன். உங்களுக்கும் ஜெப உதவி தேவையாயின் தயங்காமல் தொடர்புகொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம். ஜெபத்தின் மூலம் உங்கள் வாழ்வில் அற்புதங்கள் நடக்கும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

### எஸ்தர் ஜெபக்குழு ஊழியம்

**"அங்கே இவர்களெல்லாரும்...ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" (அப்போஸ்தலர் 1:14)**








2024-ம் ஆண்டு 140 எஸ்தர் ஜெபக்குழுக்கள், 55 வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழுக்கள், 35 ஜூனியர் எஸ்தர் ஜெபக்குழுக்கள் மற்றும் 15 தம்பதியர் எஸ்தர் ஜெபக்குழுக்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவைத்தவிர செயல்படாமல் இருந்த 450 குழுக்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

நான்கு வகையிலும் சேர்த்து மொத்தத்தில் 1275 எஸ்தர் ஜெபக்குழுக்களில் 3,12,000 பேர் மாதந்தோறும் தொடர்ந்து ஜெபிக்கின்றனர். ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும்படி அநேகர் முன்வருவது பெருத்த ஆசீர்வாதமாக உள்ளது.

### பத்திரிகை ஊழியம்

**"உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமை யானவைகள்; என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்"**

**(சங்கீதம் 119:103)**

இயேசு அழைக்கிறார் பத்திரிகை தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, கன்னடம் மற்றும் குஜராத்தி ஆகிய மொழி களில் வெளியாகி லட்சக்கணக்கானோருக்கு ஆவிக்குரிய ஆசீர் வாதத்தைக் கொண்டுவருகிறது. மாதந்தோறும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பத்திரிகை செல்கிறது.

டிஜிட்டல் வடிவ பத்திரிகை மூலம் 1,50,000-க்கும் அதிகமான மக்கள் ஆசீர்வாதம் பெறுகின்றனர். மக்களின் வாழ்வில் நம் பத்திரிகையின் மூலம் நடைபெறும் ஆசீர்வாதங்களைக் காண்பது ஆச்சரியமாயிருக்கிறது.

### U-Turn ஊழியம்

**"உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு, நீ ...விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு"**

**(1 தீமோத்தேயு 4:12)**

கடந்த ஆண்டு பிள்ளைகள் சாமுவேல் தினகரன், Dr. ஷில்பா தினகரன், ஸ்டெல்லா ரமோலா, டேனியல் டேவிட்சன் ஆகியோர் ஆராதனை மாலை, U-Turn கிளப் கூட்டம், வாலிபர் ஆசீர்வாத கூட்டங்கள், வாலிபர் வல்லமை முகாம் போன்ற கூட்டங்களை பல்வேறு நகரங்களில் நடத்தியுள்ளனர். ஜெபகோபுரங்களில் நடக்கும் U-Turn கிளப் கூட்டங்களில் 20,000-க்கும் மேற்பட்ட வாலிபர்கள் கலந்துகொண்டனர். உங்கள் பிள்ளைகள் ஆண்டவ ருக்குள் வளரும்படி இக்கூட்டங்களுக்கு உங்கள் பிள்ளைகளை அனுப்புங்கள்.

### சிறுவர் ஊழியம்

**"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்"**

**(மத்தேயு 19:14)**

கடந்த ஆண்டு, டைனமிக் சிறுவர் முகாம் மூலமாக ஏறத்தாழ 3,000 சிறுபிள்ளைகளுக்கு ஆண்டவரைப் பற்றி கற்றுக்கொடுக்கப் பட்டுள்ளது. இயேசு அழைக்கிறார் Kids You Tube Channel மற்றும் ஃபேமிலி சேனலில் ஒளிபரப்பாகும் குட்டீஸ் கலாட்டா நிகழ்ச்சிகள் மூலம் 6,57,036 சிறுபிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டனர். உங்கள் பிள்ளைகள் தேவனுடைய வார்த்தையில் வேரூன்றும்படி இந்த நிகழ்ச்சிகளை பார்க்க அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

ஜெபகோபுரங்களில் ஞாயிறுதோறும் கிட்ஸ் கிளப் கூட்டங்கள் நடை பெறுகிறது. மாதந்தோறும் ஏறக்குறைய 9,469 சிறுபிள்ளைகள் கலந்து கொள்கிறார்கள். ஜெப கோபுரங்களில் நடந்த குழந்தைகள் தின சிறப்பு நிகழ்ச்சியில் 3,697 குழந்தைகள் பங்கேற்ற னர். உங்கள் குழந்தைகளும் இவ்வாறு கிறிஸ்துவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வாழ்வின் மகிமையை அனுபவிக்கும்படி இக்கூட்டங்களுக்கு அனுப்புங்கள்.

### பிரார்த்தனை கலாசாலை மற்றும் பயிற்சி

**"கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்..."**

**(அப்போஸ்தலர் 2:17)**

பிரார்த்தனை கலாசாலை மற்றும் பயிற்சித் துறையின் சார்பில் 'தேவனோடு இணைந்திருத் தல்' என்ற தலைப்பில் ஜெபகோபுரங்களில் 6 வார பயிற்சி நடத்தப்பட்டது. இந்தியா முழுவதும் 305 அணிகளில் 4,010 பங்காளர்கள், ஊழியப் பயிற்றுநர்களால் பயிற்சி பெற்று தற்போது ஜெப கோபுரங்களில் தன்னார்வ ஊழியம் செய்கின்ற னர். பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதல்படி 'ஜெபம் மற்றும் தீர்க்கதரிசன வல்லமை' என்ற ஆறுமாத சான்றிதழ் பயிற்சியை சென்னையில் 2024 ஜூலை 22-ம் தேதி நானும் என் குடும்பத்தினரும் ஆரம்பித்து வைத்தோம். இதில் நேரடியாக 52 பேரும், இணைய வழியில் 45 பேரும் பயிற்சி பெறுகின்றனர். மற்ற பயிற்றுநர் களுடன் நாங்களும் இதில் வகுப்புகளை எடுக் கிறோம். இதில் கலந்துகொள்கிறவர்கள் அபிஷே கமும், தீர்க்கதரிசன கிருபையும் பெறுவதால் மெய்யாகவே ஆவிக்குரியவிதத்தில் மறுரூப




மாகும் அனுபவமாக விளங்குகிறது. இதில் பயிற்சி பெறுகிறவர்கள் பெதஸ்தா விலும், காருண்யாவிலும் மற்றவர் களுக்கு ஊழியம் செய்யும்படி ஊழியப் பயணமாகவும் அழைத்துச் செல்லப் பட்டனர்.

ஆண்டவருடன் நெருங்கி ஜீவிக்கும் படியும், அவருக்காக பெரிய காரியங் களைச் செய்யும்படியும் ஊழியர்களை யும், பங்காளர்களையும் பலப்படுத்தி, பயிற்றுவிக்க கிருபை செய்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம் (தானியேல் 11:32).

### சபைகளுக்கு உதவி

**"நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ?" (2 சாமுவேல் 7:5)**

ஆண்டவர் எங்கள் இருதயத்தை ஏவியபடி கடந்த ஆண்டு பல திருச்சபைகளுக்கு உதவினோம். 173 தேவ ஊழியர்களுக்கு உதவியதோடு 22 புதிய ஆலயங்கள் கட்டுவதற்கும் நிதியுதவி செய்தோம். இதன் மூலம் பெரிய அளவில் சமுதாயத்திற்கு நன்மை ஏற்பட்டுள்ளது.

### சர்வதேச ஊழியம்

**"என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்" (ஏசாயா 56 :7)**

வெளிநாடுகளில் 13 இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள் சேவை செய்கின்றன. இங்கு நடைபெறும் ஆசீர்வாதக் கூட்டங்கள், இணையவழி ஆசீர்வாதக் கூட்டங்கள் வாயிலாக அநேக மக்களின் வாழ்க்கையை ஆண்டவர் தொடுகிறார்.

2024-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடந்த 3 கூட்டங்களில் நூற்றுக்கணக்கான மக்களுக்கு ஜெபிக்கும் சிலாக்கியத்தை ஆண்டவர் வழங்கினார். இஸ்ரேல் ஜெப கோபுரத்தில் ஜெபவீரர்கள் உலக நாடுகளுக் காக 3,968 மணி நேரம் ஜெபித்துள்ளனர். 2,645 பேர் இஸ்ரேல் ஜெபகோபுரத்திற்கு நேரில் வந்து ஜெபித்துள்ளனர். இயேசு அழைக்கிறார் ஊழியம் மூலம் தம் எல்லையை விரிவுபடுத்தும் தேவனுக்கு மகிமையுண் டாவதாக.

### 2025-ம் ஆண்டுக்கான நமது தரிசனம்:

தொலைபேசி ஜெப கோபுரம் மூலம் 45 லட்சம் பேருக்கு ஜெபிக்கவேண்டும்.

ஜெப கோபுரங்கள் வாயிலாக 25 லட்சம் பேருக்கும், கடிதங்கள், மின்னஞ்சல்கள் மூலம் 8 லட்சம் பேருக்கும் ஜெபிக்கவேண்டும்.

தேசம் முழுவதும் 6,000 ஜெப வீரர்களை எழுப்ப வேண்டும்

கோடிக்கணக்கானோர் இரட்சிப்பை, விடுதலையை, தேறுதலை பெற்றுக்கொள்வதற்காக சமூக ஊடகங்களில் ஆயிரக்கணக்கான வீடியோ உள்ளிட்ட (reels, blogs) பல்வேறு பதிவுகளை செய்யவேண்டும்.

ஆலயங்கள், திருச்சபைகளுக்கு உதவும்படியாகவும் தனிப்பட்ட மற்றும் ஊழிய தேவைகளை சந்திக்கும்படியும் 1,200 போதகர்களை தாங்கவேண்டும்.

தேசமெங்கும் பிரார்த்தனை திருவிழாக்களை நடத்தி, லட்சக்கணக்கான மக்களின் இரட்சிப்புக்காக, விடுதலைக் காக, ஆறுதலுக்காக மன்றாட வேண்டும்.

நாம் கோடிக்கணக்கான மக்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கும்படி, இந்த உன்னத பணிக்காக ஜெபித்தும் தாங்கியும் எங்களோடு இணைந்துகொள்ளுங்கள்.

அன்பானவர்களே, இந்த ஆண்டு உங்கள் வாழ்வில் ஆசீர்வாதங்கள் நிரம்பி வழியும்விதத்தில் ஆசீர்வாத மழையை பெய்யப்பண்ணி, உங்களை புதுப்பித்து, சந்தோஷத்தை அருளி, கனிகொடுக்கும்படி செய்வாராக. நம்மை அழைத்தவர் தம் நற்கிரியையை நடத்தி முடிக்க உண்மையுள்ளவர் என்று அவரை நம்பி, விசுவாசத் துடன் முன்னேறி செல்லுவோம்.

**"உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார்"**

**(உபாகமம் 15:10)**

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்,

Dr. பால்தினகரன்.



Karunya
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++











# Celebrating the Spirit of Christmas @ Karunya Institutions

The Karunya University Megaplay 2024 was the crown jewel of this year's celebrations. Titled FAR, this awe-inspiring production featured over 370 participants, including 116 singers, 19 dubbing artists, 70 actors, 19 musicians, 76 choreographers, and 64 backdrop and property artists. Guided by dedicated staff, the students delivered a performance so authentic and moving that it brought the story to life with incredible realism. The seamless integration of cutting-edge VFX added a magical touch, making the message of hope and redemption even more powerful. Dr. Paul Dhinakaran, Chancellor of Karunya University, shared the Christmas message, leaving the audience inspired and blessed.

Adding to the joy, Evangeline Matriculation Higher Secondary School and Karunya Christian School hosted vibrant celebrations. Highlights included the little ones' heartfelt performance of Celebrating Christ – Happy Birthday, Jesus, a mesmerizing dance of worship, and the drama Majesty Revealed in Humility. The Founding Family joined the children on stage, bringing extra cheer to the occasion.

The grand finale was the staff Christmas celebration, where everyone from administrators to staff showcased their talents with enthusiasm. The Founding Family's participation, along with a time of prayer, the Word of God, and a sumptuous feast, made the event truly special.





# வாழ்வை சிறப்பாக மாற்றும் ஆசிரியர்களை தாங்குவோம்



வளரும் பருவத்தினர், குறிப்பாக நலிவுற்ற பிரிவை சார்ந்த இளைஞர்கள், தங்கள் எதிர்காலத்திற்கு உரிய பாதையை சரியாக தெரிந்தெடுப்பதற்கு தரமான கல்வியே உதவுகிறது. அத்தகைய பிள்ளைகள் உயர்கல்வியை பெறுவதில் தரமான ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது. நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் தங்கள் திறனை முழுமையாக வெளிக்கொணரும்படி திறமையான ஆசிரியர்களிடம் படிப்பது இயலாத காரியமாக உள்ளது.



இந்தியா முழுவதும் 36 களப்பணியிடங்களில் சீஷாவின் கற்றல் மையங்கள் செயல்படுகின்றன. இங்கு வறுமையான பின்னணியை சேர்ந்த பிள்ளைகள் தரமான கல்வியைப் பெற உதவும்படி 9 முதல் 12-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியருக்கு சிறப்பு வகுப்புகள் நடத்தப் படுகின்றன. இந்தப் பாடங்களில் சிறந்த முறையில் பயிற்சியளிக்கக்கூடிய நிபுணர்களை அழைத்து இந்த வகுப்புகள் நடத்தப்படுகின்றன.



**கல்வியறிவு கொடுப்போம்; வாழ்க்கையை மாற்றுவோம்**

நான் குழந்தையாக இருந்தபோதே என் தந்தையை இழந்துவிட்டேன். என்னுடைய அம்மா, வீடுகளில் வேலை செய்து என்னையும் என் சகோதரியையும் வளர்த்தார்கள். சீஷா கற்றல் மையத்தில் படித்து நாங்கள் கல்வியில் சிறந்து விளங்குகிறோம். ஆண்டுதோறும் சீஷா, ஸ்கூல் கிட் மற்றும் புத்தாடை தருவதற்காக நன்றி கூறுகிறோம். நாங்கள் பள்ளிக்குச் செல்ல அவை எங்களுக்கு ஊக்கமளிக்கின்றன.

- Ms. J. மேகா, கற்றல் மைய மாணவி, ராஞ்சி.

**ஏழைப் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சி**



சென்னையில் 2024 டிசம்பர் 14-ம் தேதி, புத்தாடை வழங்கும் நிகழ்வை சீஷா ஸ்தாபகர் Dr. பால் தினகரன் மற்றும் அவரது குடும்பத்தினர் தொடங்கி வைத்தனர். இந்த தொடக்க நிகழ்வில் ஏழைப் பிள்ளைகள் 1,000 பேர் புத்தாடைகளை பெற்று, சந்தோஷமடைந்தனர். இந்தியா முழுவதும் பல்லாயிரக் கணக்கான ஏழைப் பிள்ளைகளுக்கு சீஷா புத்தாடைகளை வழங்கி வருகிறது. இன்னும் பல இடங்களில் சீஷா, புத்தாடைகளை வழங்க இருப்பதால், நீங்களும் இதில் இணைந்து ஏழைப் பிள்ளைகளுக்கு இந்த புத்தாண்டு சிறப்பானதாக அமைய உதவுங்கள்.

**கீழ்க்காணும் விதங்களில் நீங்கள் உதவலாம்**

* கற்றல் மையத்தில் போதிக்கும் ஓர் ஆசிரியருக்கு கௌரவ ஊதியம் ரூ.5,000/- ஒரு மாதத்திற்கு
* 20 பிள்ளைகளுக்கு புத்தாடைகள் வழங்குவதற்கு ரூ.10,000/-

TAX-EXEMPTED

DONATE TO SEESHA

UPI ID : 9384015155@okbizaxis

G Pay PhonePe Paytm UPI pay
OLA MONEY freecharge MobiKwik JioMoney

You can also donate through www.cashfree.com/payme/seesha

044 66660000
+91 9300 600 600
www.seesha.org
info@seesha.org
* When you Donate send the Details to +91 9300 600 600
SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045

குடும்ப பகுதி

# இயேசுவுக்குள் வளர்க்கப்படும் குடும்பம்



அன்பானவர்களே, 2025-ம் ஆண்டு, உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் ஆண்டவரின் பூரண ஆசீர்வாதங்கள் நிறைந்த புத்தாண்டாக அமைவதாக.



உங்கள் குடும்பம் தேவனால் கொடுக்கப்பட்ட ஈவு. அன்பை, விசுவாசத்தை, குறிப்பிட்ட நோக்கத்தை வளர்ப்பதற்கான தெய்வீக அமைப்பாக குடும்பம் இருக்கிறது. குடும்பத்தின் அரவணைப்புக்குள் நாம் இயேசுவின் வெளிச்சத்தில் நடக்கவும், அவருடைய அன்பை பகிர்ந்துகொள்ளவும் கற்றுக்கொள்கிறோம். ஆண்டவருக்குள் தங்கள் விசுவாசத்தை வளர்த்து, சுவிசேஷத்திற்காக இணைந்து வேலை செய்து, மற்றவர்கள் ஆவிக்குரியவிதத்தில் வளரும்படி ஊக்கப்படுத்திய ஆக்கில்லா, பிரிஸ்கில்லா தம்பதியினரின் குடும்பமே வேதாகமத்தில் இதற்கு நல்ல உதாரணமாகும். உங்கள் குடும்பம் கிறிஸ்துவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இருக்கும்போது, தம்மை கனப்படுத்துகிறவர்களுக்கு அவர் கொடுத்துள்ள வாக்குத்தத்தங்களின்படி பூரண ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியும்.

### தேவனுடைய வார்த்தையில் வேரூன்றுதல்

**“இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி,” (உபாகமம் 6:6,7)**

தேவனுடைய வார்த்தையில் வேரூன்றியிருக்கும் குடும்பம், தண்ணீரண்டை

இவாஞ்சலின் பால் தினகரன் / evangeline@jesuscalls.org

யில் நாட்டப்பட்ட மரம்போல செழித்திருக்கும் (சங்கீதம் 1:3). ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தேவனுடைய வார்த்தையில் நாட்டப்பட்டிருந்தார்கள்; தங்கள் அறிவை பயன்படுத்தி, மற்றவர்களை விசுவாசத்தில் ஊக்கப்படுத்தினார்கள். மக்கள் ஆவிக்குரியவிதத்தில் வளர அவர்கள் வீடு ஏற்றதாக இருந்தது; அவர்கள் தேவனுடைய மார்க்கத்தைக் குறித்து அப்பொல்லோவுக்கு திட்டமாய் விவரித்ததை வேதத்தில் காண்கிறோம் (அப்போஸ்தலர் 18:26). உங்கள் குடும்பத்தில் தினசரி வேதத்தை வாசித்து தியானிக்கும் வழக்கத்தை ஏற்படுத்துங்கள். தேவனுடைய வார்த்தை, தினசரி எடுக்கவேண்டிய முடிவுகளை உறுதிசெய்ய உங்களை எப்படி பக்குவப்படுத்துகிறது என்பதை உங்கள் பிள்ளைகளுடன் பகிர்ந்து அவர்களுக்கு மாதிரியாக விளங்குங்கள். வேத வசனங்கள் உங்கள் பிள்ளைகளின் கால்களுக்குத் தீபமாக விளங்கும்படி அவற்றை மனப்பாடம் செய்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்துங்கள் (சங்கீதம் 119:105). தேவனுடைய வார்த்தையைக் கொண்டு ஒருவரையொருவர் வளர்க்கும் குடும்பம், நன்கு போஷிக்கப்படுகிறது என்பதை மறந்துபோகாதிருங்கள்.




### இணைந்து ஜெபிக்கும் குடும்பம்

**"இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" (மத்தேயு 18:20)**

ஜெபம், ஒரு குடும்பம் தேவனோடு கொண்டிருக்கும் ஐக்கியத்தின் மூலைக்கல்லாக விளங்குகிறது. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தம்பதியாகவும், குடும்பமாகவும் சேர்ந்து ஜெபித்து, தங்கள் ஊழியத்திலும், தனிப்பட்ட வாழ்விலும் தேவனுடைய வழிகாட்டுதலை தேடினார்கள். ஜெபம், உங்கள் குடும்பத்தை தேவனோடு கிட்டிச்சேரச் செய்வதோடு, குடும்பத்தையும் ஒற்றுமையாக பிணைக்கும்.

காலை நேரத்தில் ஏறெடுக்கும் சுருக்கமான ஜெபம், சாப்பாட்டு முன்னர் ஏறெடுக்கும் ஸ்தோத்திர ஜெபம், மாலைநேர மன்றாட்டு ஜெபம் என்று உங்கள் குடும்ப வாழ்க்கையில் ஜெபம் முக்கிய பங்கு வகிக்கட்டும். நீங்கள் தனியாகவும் குடும்பமாக இணைந்தும் ஜெபிக்கும் தருணங்களால், தேவ சமாதானமும் பெலனும் உங்கள் குடும்பத்தை நிறைக்கும். தேவனை அதிகமாய் சார்ந்திருப்பதை ஜெபத்தின் மூலம் உங்கள் குடும்பம் கற்றுக்கொள்ளும்.

### ஒருவரையொருவர் தாங்கி ஊக்கப்படுத்துதல்

**"நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:11)**

சுவிசேஷத்தை அறிவிப்பதில் அப்போஸ்தலனாகிய பவுலுடன் இணைந்து வேலை செய்த ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தினர். தேவன்மீதுள்ள விசுவாசத்திலும், அவருடைய நோக்கத்தை செய்து முடிப்பதிலும் குடும்பத்தினர் ஒருவரையொருவர் தாங்குவது எவ்வளவு முக்கியமானது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சவால்கள் சூழ்ந்திருக்கும் உலகில், குடும்பத்துக்குள் ஒருவரையொருவர் ஊக்கப்படுத்துவது அதிக முக்கியமாயிருக்கிறது. ஆகவே, குடும்பத்துக்குள், ஒருவரது சாதனையை மற்றவர் கொண்டாடுங்கள்; உபத்திரவத்தின் போது ஆறுதலாக இருங்கள்; தேவனுடைய வாக்குத்தத்தங்களை ஒருவருக்கொருவர் ஞாபகப்படுத்துங்கள். இப்படி ஒருவரையொருவர் தாங்கும்போது நீங்கள் தேவ அன்பை வெளிப்படுத்துகிறவர்களாக இருப்பீர்கள்.

### பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வதில் இணைந்திருங்கள்

**"யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" (எபிரெயர் 12:14)**

பரிசுத்தம் என்பது, தனி நபருக்கு மாத்திரமல்ல; குடும்பங்களுக்கும் உரியது. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் வார்த்தையில், செய்கையில், உறவுகளில் பரிசுத்தத்தை காத்தனர். தேவனிடத்தில் அவர்கள் கொண்டிருந்த அர்ப்பணிப்பு, அவர்கள் வீட்டை, மற்றவர்களும் தேவ சமுகத்தை உணரக்கூடிய ஸ்தலமாக மாற்றியது.

உங்கள் குடும்பம் தேவனை கனப்படுத்தும்விதத்தில் வாழவேண்டும். வீட்டில் நீங்கள் அனுமதிக்கும் பொழுதுபோக்குகள், பேசும் உரையாடல்கள், முதலிடம் கொடுக்கும் காரியங்கள் இவற்றைக் குறித்து கவனமாயிருக்கவேண்டும். நீங்கள் பரிசுத்தமடைய குடும்பமாக பிரயாசப்படுவதின் மூலம், வரும் தலைமுறைகள் பின்பற்ற ஆவிக்குரிய பாதையை உருவாக்குகிறீர்கள்.

## தீமைக்கு எதிராக நிற்பதில் உறுதி

**"கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்" (எபேசியர் 6:10,11)**

கிறிஸ்துவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் குடும்பமானது, விரோதத்தையும் வருத்தத்தையும் விதைப்பதற்கு சத்துரு செய்யும் முயற்சிகளைக் குறித்து எப்போதும் விழிப்புடன் இருக்கும். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் ஊழியத்திற்கு தங்கள் வீட்டைத் திறந்துகொடுத்ததால், ஆவிக்குரிய இடுக்கண்களை சந்தித்தனர். ஆனாலும், அவர்கள் இறுதிவரை தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருந்தார்கள். தேவனுடைய வசனத்தையும் ஜெபத்தையும் சார்ந்து, அவர்மீதுள்ள விசுவாசத்தில் திடனாய் நிற்க உங்கள் குடும்பத்திற்கு கற்றுக்கொடுங்கள். சத்துருவின் தந்திரமான யோசனைகளை பகுத்தறிந்து அடையாளம் காணும்படி ஒன்றாய் ஜெபியுங்கள். குடும்பத்தில் அனைவரும் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்து, பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்போது அவன் ஓடிப்போவான் (எபேசியர் 6:11-17).

## குடும்பமாக தேவ பணி

**"நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்..." (மத்தேயு 28:19,20)**

ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் குடும்பத்துக்குள்ளாக, தேவன்மீதுள்ள தங்கள் விசுவாசத்தை வளர்த்துக்கொண்டதோடு திருப்தியாகிவிடவில்லை. அவர்கள் அதை பிறருடன் பகிர்ந்துகொண்டார்கள். தங்கள் வீட்டில் அவர்கள் ஒரு சபையை நடத்தினார்கள் (1 கொரிந்தியர் 16:19). பவுலின் மிஷனெரி பணிக்கு ஆதரவாயிருந்தார்கள். அதுபோல, தேவனுடைய அன்பை பிறருடன் பகிர்ந்துகொள்ளும்படி உங்கள் குடும்பத்தாரை உற்சாகப்படுத்துங்கள். அண்டை வீட்டாரை ஜெபக்கூட்டத்திற்கு அழைப்பது, தேவையில் உள்ளவர்களுக்கு உதவுவது, உங்கள் சாட்சியை பகிர்ந்துகொள்வது என்று நீங்கள் குடும்பமாக கிறிஸ்துவின் வெளிச்சத்தை பிரகாசிக்க முடியும். இவ்வாறு உங்கள் குடும்பம் பக்தியுள்ள ஊழியத்தில் இணைந்திருக்கும்போது, நீங்கள் ஒவ்வொருவரும் தேவனை கிட்டிச்சேருவீர்கள்.

## தேவனுடைய உண்மையை நினைவுகூருதல்

**"பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல், கர்த்தரின் துதிகளையும் அவருடைய பலத்தையும், அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம்" (சங்கீதம் 78:4)**

இயேசுவுக்குள் ஒருவரையொருவர் வளர்த்துக் கொள்ளும் குடும்பத்தினர், தங்கள் விசுவாசத்தை அடுத்த சந்ததிக்கு கடத்துகிறார்கள். ஆக்கில்லாவிடமும் பிரிஸ்கில்லாளிடமும் விளங்கிய உண்மை, அநேகரை தூண்டியது; சுவிசேஷம் தொடர்ந்து விரிவடையும்படி செய்தது. தேவன் செய்தவற்றை பகிர்ந்துகொள்வதின் முக்கியத்துவத்தை அவர்கள் புரிந்திருந்தனர். உங்கள் குடும்பத்தில், குறிப்பாக பிள்ளைகளிடம் தேவன் உண்மையுள்ளவர் என்பதைக் குறித்து பேசுங்கள். ஜெபங்களுக்கு பதில் கிடைத்த சம்பவங்கள், தேவன் கொடுத்த ஆசீர்வாதங்கள், ஆவிக்குரிய வெற்றிகள் ஆகியவற்றை பகிர்ந்துகொள்ளுங்கள். தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய கரம் செயல்படுவதை கண்டுகொள்ள உற்சாகப்படுத்துங்கள்; அவரது வாக்குத்தத்தங்களை நம்புவதற்கு அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள்.

## பரிபூரண ஆசீர்வாதங்களுக்கான வாக்குத்தத்தம்

**"நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார்" (நீதிமொழிகள் 3:33)**

குடும்பத்தில் உள்ளவர்கள் ஒருவரையொருவர் ஆண்டவருக்குள் வளர்த்துக்கொண்டால், குடும்பம் தேவனுடைய பரிபூரண ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியும். கிறிஸ்துவுக்கு முக்கியத்துவம் அளிக்கும் குடும்பம், தேவனுடைய மகிமைக்கேற்றபடி உலகில் நல்ல மாற்றத்தை உருவாக்க முடியும் என்று ஆக்கில்லா - பிரிஸ்கில்லாளின் குடும்பம் நமக்குக் காண்பிக்கிறது. உங்கள் குடும்பத்தில் தேவனுக்கு முக்கியத்துவம் கொடுத்தால், குடும்பம் விசுவாசத்திலும் ஒருமைப்பாட்டிலும் வளரும். முக்கியமாக, உங்கள் வீட்டார், சுற்றிலுமிருக்கிறவர்களுக்கு தேவனுடைய சுபாவத்தையும் அன்பையும் காண்பிப்பார்கள். இந்தப் புத்தாண்டில் உங்கள் குடும்பத்தை கிறிஸ்துவுக்குள் வளரச் செய்யும்போது, அவரது வாக்குத்தத்தங்கள்மீது அதிக நம்பிக்கை கொள்ளும்படியும், அவரது வழிகாட்டுதலை தேடும்படியும் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். உங்கள் வீடு, தேவனுடைய கிருபையையும் அன்பையும் பிரதிபலிக்கும் ஸ்தலமாக விளங்கட்டும். தேவனோடு தரித்திருக்கும் குடும்பம், அவரது நித்திய பிரசன்னத்தையும், அவரது வழிகாட்டுதலையும், நிரம்பி வழியுமளவுக்கு அவரது ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளும். பின்வரும் சந்ததிக்கென்று ஒரு விசுவாச பாரம்பரியத்தை ஏற்படுத்திச் செல்லும் (யோசுவா 24:15; சங்கீதம் 32:8; மல்கியா 3:10,11).

"உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்"
(2 கொரிந்தியர் 9:7)

# ஜெப வீரர்களுக்கு மகிழ்ச்சி

# உங்களுக்கு நன்றி









**தியாகத்தோடு உழைக்கும் ஊழியர்களுக்கு வெகுமதி**

நீங்கள் உதாரத்துவமாக வழங்கிய காணிக்கையால், 'இயேசு அழைக்கிறார்' ஜெப வீரர்களுக்கு வெகுமதிகளைக் கொடுத்தோம். அவர்கள் மகிழ்ச்சியும் ஊக்கமும் பெற்றார்கள். ஜெப வீரர்கள் தங்களுக்கு தனிப்பட்ட இழப்புகள், பிரச்னைகள் இருப்பினும், ஒவ்வொரு ஜெப விண்ணப்பத்தையும் தங்கள் விண்ணப்பமாகவே கருதி, தேவ அன்புடன் மற்றவர்களுக்காக ஜெபிக்கிறார்கள். நீங்கள் வழங்கிய வெகுமதி அவர்களுக்கு அருமையானது; அது அவர்களுக்கு அதிக ஊக்கத்தை அளித்துள்ளது. ஜெப வீரர்களின் தன்னலமற்ற சேவையால் பல லட்சக்கணக்கானோர் நம்பிக்கை பெறுவதால், அவர்களுக்கு நன்றி பாராட்டும் விதமாக ரூ.3,000/- மதிப்புள்ள வெகுமதிகளை கொடுத்துள்ளோம். நீங்கள் தியாகத்துடன் கொடுக்கும் இக்காணிக்கை, நீங்கள் நினைப்பதற்கும் அதிகமான அளவில் பலருக்கு ஆசீர்வாதமாக உள்ளது. தொடர்ந்து நீங்கள் ஊழியத்தை தாங்கி வருவது எங்களுக்கு பெருத்த ஆசீர்வாதமாக உள்ளது; ஆகவே, உதாரத்துவமான காணிக்கை மூலம் உங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்ளும்படி அழைக்கிறோம். ஆண்டவருடைய ஊழியத்திற்காக காணிக்கை வழங்கியதற்காக உங்களுக்கு நன்றி செலுத்துகிறோம். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.




## கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்

**வங்கி மூலம் :**

IndusInd Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **555444333222111**
Bank: **IndusInd Bank, Rajaji Salai Branch, Chennai - 600001.** IFS Code: **INDB0000167**

ICICI Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **000901056144**
Bank: **ICICI Bank Ltd., Nungambakkam Branch, Chennai 600 034.**
IFS Code: **ICIC0000009**

***BANK TRANSFER DETAILS CAN BE INTIMATED: partnercare@jesuscalls.org***

QR Code-ஐ ஸ்கேன் செய்து அனைத்து UPI செயலிகள் மூலமும் தாங்கலாம்.

Paytm G Pay BHIM

**SCAN TO PAY**

UPI ID ***jesuscalls@indus***

நீங்கள் வங்கி பரிமாற்றம் மற்றும் வங்கிகளின் செயலிகள் (Apps) மூலமாக நன்கொடை அனுப்பினால், தயவுசெய்து அதைக் குறித்த விவரங்களை உடனே 98409 99923 என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் அல்லது வாட்ஸ்அப் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கவும், உங்கள் நன்கொடை வந்து சேர்ந்ததற்கான ஒப்புதலை உங்களுக்கு தெரியப்படுத்தவும் அது உதவும்.

மணியார்டர் (EMO) மற்றும் 'JESUS CALLS' என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் / காசோலை (CTS) எடுத்து, ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 600 028 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

உங்கள் பகுதியிலுள்ள ஜெப கோபுரத்திற்கு சென்றும் தாங்கலாம்

# 2025 புத்தாண்டில் ஆண்டவருக்கு ஸ்தோத்திர காணிக்கை

நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள் என்று வேதம் கூறுகிறது (கொலோசெயர் 3:15). நாம் ஆண்டவருக்கு நன்றியறிதலுடன் இருப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. விசேஷமாக, அவர் ஓர் அற்புதத்தை செய்து, புதிய வேலையை கொடுத்து, குழந்தை பாக்கியத்தை அருளிச்செய்து, ஜெபத்திற்கு பதில்கொடுத்து தம்முடைய தயவை நமக்குக் காண்பிக்கும்போது; நான் நன்றியுடன் பதில் செய்வது அவசியமாகிறது. நன்றி செலுத்துவது, தேவனே சகல ஆசீர்வாதங்களின் ஊற்றாயிருக்கிறார் என்பதை காட்டுகிறது.



"என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்" (1 சாமுவேல் 2:30) என்று ஆண்டவர் கூறுகிறார். தேவனை கனம்பண்ணுவது என்பது, நம்முடைய முதற்பலனால் அவரைக் கனப்படுத்துவதாகும் (நீதிமொழிகள் 3:9,10). நம்முடைய வருமானத்தில், நேரத்தில், தாலந்துகளில் முதற்பலனை கொடுப்பது, நம் தேவைகள் எல்லாவற்றையும் தேவன் அருளிச்செய்கிறார் என்ற நம்பிக்கையை காண்பிக்கிறது. அவ்வாறு செய்வதன் மூலம், நாம் நம்முடைய சொந்த முயற்சிகளால் அல்ல; அவரால் தான் நமக்கு எல்லாம் கிடைக்கிறது என்று அறிக்கையிடுகிறோம். இப்படி அறிக்கையிடுவது, ஜனங்களுக்கு முன்பு கர்த்தருக்கு சாட்சியாயிருக்கிறது; நாம் இன்னும் பெரிய அற்புதங்களைப் பெற்றுக்கொள்ள வழி செய்கிறது. அது தேவனுக்குச் சுகந்த வாசனையாக இருக்கும் (ஆதியாகமம் 8:21).

தாங்கள் பெற்ற அற்புதங்களுக்காக ஆண்டவருக்கு காணிக்கை செலுத்துவதன் மூலம் மக்கள் எவ்வாறு ஆசீர்வாதம் பெற்றுள்ளனர் என்பதை விளக்கும்வண்ணம் சில சாட்சிகள்:

### ஆசீர்வாதமாக கிடைத்த பெரிய வீடு

நான் 19 ஆண்டுகளாக இயேசு அழைக்கிறார் ஊழியத்தை உண்மையாய் தாங்கி வந்தேன். 2002-ம் ஆண்டு எனக்கு திருமணமான பிறகு, நாங்கள் குடும்பமாக வாடகை வீடுகளில் குடியிருந்தோம். எங்களுக்கு சொந்த வீடு வேண்டும் என்று வாஞ்சித்து ஜெபித்து வந்தோம். எங்களுக்கு இருந்த சிரமத்தின் மத்தியிலும் ஊழியத்திற்கு தொடர்ந்து கொடுத்தோம். சிறிய வீடு கிடைக்கும் என்று நம்பியிருந்தோம். ஆனால், தேவன் நாங்கள் நினைத்தற்கும் மேலாக, விசாலமான அழகிய வீட்டை தந்திருக்கிறார்.

- சந்தியா லோகெண்டே, பூனா, மகாராஷ்டிரா.

### அரசு வேலை என்னும் ஆசீர்வாதம்

எனக்கு திருமணமானது. ஆனால், என் கணவர் மரித்துப்போனார். ஆகவே, மிகுந்த கவலையுற்றேன். என்



அம்மா வீட்டுக்குச் சென்றேன். அவர்கள் என்னை ஜெப கோபுரத்திற்கு அழைத்துச் சென்றார்கள். வாழ தேவையான பணமீட்டுவதற்கு போராடிக்கொண்டி ருந்தேன். ஆகவே, அரசு வேலையை பெறுவதற்கு முயற்சித்தேன். ஆனால், அரசு வேலைக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான பணம்கூட என்னிடம் இல்லை. அனுதினமும் அழுது கொண்டிருந்தேன். தொடர்ந்து ஜெப கோபு ரத்திற்குச் சென்று ஊக்கமாய் ஜெபித்தேன். தவறாமல் ஊழியத்திற்கு காணிக்கை கொடுத்து வந்தேன். அரசு வேலையைப் பெறுவதற்கு இறுதி முயற்சியை செய்தபோது, என் ஜெபங் களுக்கு பதில் கிடைத்தது. எனக்கு 32 வயதாகி யிருந்தாலும், அரசு வேலை கிடைத்தது. தற்போது ரூ.40,000/- ஊதியம் பெறுகிறேன். தேவன், என் இருளை வெளிச்சமாக்கினார். அத்தனை சந்தோஷம்! அவர் உங்களுக்கும் அப்படியே செய்வார். - இளையராணி, மதுரை.

இந்தப் பங்காளர்கள் ஆசீர்வதிக்கப்பட்டதுபோல், ஆண்டவருக்கு ஸ்தோத்திர காணிக்கை செலுத்தி நீங்களும் ஆசீர்வாதம் பெறலாம்.

---

2025-ம் ஆண்டு, நம் நாட்டில் ஜனங்களுக்கு நம்பிக்கையை தரும்வண்ணம், ஜெபிப்பதற்கு மாவட்டத்திற்கு ஒன்று என்று 800 ஜெப கோபுரங்களை ஸ்தாபிக்கும் தரிசனத்தினுள் கடந்து செல்கிறோம். 'ஒரு ஆத்துமாவும் கெட்டுப்போகக்கூடாது' என்ற ஊழிய நோக்கத்தோடு, ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் அன்பையும் இரட்சிப்பின் கிருபையையும் அனுபவிக்கும் வாய்ப்பை பெறவேண்டும் என்று உழைத்து வருகிறோம்.

புத்தாண்டிற்குள் அடியெடுத்து வைக்கிற வேளையில், இந்த ஊழியத்தின் வாயிலாக ஆண்டவர் உங்கள்மேல் பொழிந்தருளியுள்ள கணக்கற்ற நன்மைகளை எண்ணிப்பாருங்கள். அவர் அருளிச்செய்கிற நன்மைகள், தரும் பாதுகாப்பு, ஜெபங்களுக்கு கொடுக்கிற பதில், வாழ்வில் செய்யும் அற்புத கிரியைகள் அவர் மாறாத உண்மையுள்ளவர் என்பதற்கு ஆதாரமாயிருக்கின்றன. ஸ்தோத்திர காணிக்கை செலுத்தி ஏன் அவரை கனம்பண்ணக்கூடாது? இந்த ஊழியத்தில் நீங்கள் விதைக்கும் காணிக்கை, கோடிக்கணக்கானோரின் கண்ணீரைத் துடைக்கும் நம்பிக்கையின் ஆதாரமாக மாறும். தேவ ராஜ்யத்தின் பணியில் நீங்களும் ஓர் அங்கமாயிருக்கிறீர்கள் என்பது, "நீர் செலுத்தும் காணிக்கைகளையெல்லாம் அவர் நினைத்து, உமது சர்வாங்க தகனபலியைப் பிரியமாய் ஏற்றுக்கொள்வாராக" (சங்கீதம் 20:3) என்று சங்கீதக்காரன் கூறுவதுபோல எவ்வளவு பெரிய சந்தோஷம்!

---

## 2025 புத்தாண்டில் ஆண்டவருக்கு என் ஸ்தோத்திர காணிக்கை

- [ ] நான் ஸ்தோத்திர காணிக்கையாக ஒருநாள் ஊதியம் ரூ. ................/- அளிக்கிறேன்
- [ ] ஸ்தோத்திர காணிக்கையாக ஒருமாத ஊதியம் ரூ. ................/- அளிக்கிறேன்.
- [ ] ஸ்தோத்திர காணிக்கையாக ஊதியத்தில் பத்தில் ஒரு பாகமான ரூ. ................/- அளிக்கிறேன்.
- [ ] மாதந்தோறும் ரூ. ........./- காணிக்கை அளிப்பதன் மூலம் ஆண்டுக்கு ரூ. ........./- அளித்து தாங்குகிறேன்.
- [ ] ஸ்தோத்திர காணிக்கையாக லாபத்தில் ........... பாகமான ரூ. ................/- அளிக்கிறேன்.

பெயர்: ...................................................... பங்காளர் எண்: ......................................................

முகவரி: ............................................................................................................................

........................................................................................ பின்கோடு: ..........................................

மின்னஞ்சல்: .................................................. மொபைல்: ..................................................

பிறந்தநாள்: .................................................. திருமண நாள்: ..................................................

**ஜெப கோபுரத்தில் ஜெபிப்பதற்கான ஜெப விண்ணப்பங்கள்:**

உங்கள் தனிப்பட்ட ஜெப விண்ணப்பங்களுக்கும் ஜெப கோபுரத்திலுள்ள ஜெப வீரர்களோடு Dr. பால் தினகரன் இணைந்து ஜெபிப்பார். தயங்காமல் அவற்றை எழுதி அனுப்புங்கள்.

மேலும் விவரங்களுக்கு: முகவரி: ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, சென்னை 600 028

மின்னஞ்சல்: paul@jesuscalls.org

பங்காளர் சேவை எண்: 044 - 23456677 (காலை 8 முதல் இரவு 8 மணி வரை)

**இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு நன்கொடை அனுப்பும் வழிகளை இந்த இதழின் 21-ம் பக்கத்தில் தெரிந்துகொள்ளலாம்.**



# மகிமையான புத்தாண்டு

– சாமுவேல் தினகரன்

வாலிபர் பகுதி

அன்பானவர்களே, புத்தாண்டு வாழ்த்துக்கள்! ஆசீர்வாதமான ஆண்டின் தொடக்கத்தில் உங்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். புத்தாண்டு கொண்டாட்டங்கள் மகிழ்ச்சியாய் இருக்கும் என்று உறுதியாய் நம்புகிறேன். புத்தாண்டு, ஐக்கியப்படுகிற, விருந்து உண்கிற அருமையான காலம், எல்லா வற்றுக்கும் மேலாக, எதிர்காலத்தைக் குறித்த தேவனுடைய வாக்குத்தத்தங்களை எண்ணிப்பார்க்கிற காலமுமாகும். இந்த ஆண்டை உங்களுடன் சேர்ந்து ஆரம்பிக்க இயேசு காத்திருக்கிறார் என்பதை அறிவீர்களா? உங்கள் வாழ்க்கையை உயர்த்தி, மகிமையின் உயரத்திற்கு கொண்டு செல்கிற வல்லமையான வாக்குத்தத்தத்தை இந்தப் புதிய காலத்திற்காக அவர் வைத்திருக்கிறார்.

''முந்தின ஆலயத்தின் மகிமையைப்பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்'' (ஆகாய் 2:9).



இது வாழ்க்கையை மாற்றும் வசனமாய் இருக்கிறது. கடந்த ஆண்டில் நீங்கள் என்ன சவால்களை, பின்னடைவுகளை பார்த்திருந்தாலும், 'இந்த ஆலயம்' கடந்த காலத்தின் மகிமையைக் காட்டிலும் அதிக மகிமையுடையதாய் இருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். எவ்வளவு சிறந்த வாக்குத்தத்தம்!

## 'மகிமை' என்பது என்ன?

**''இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை**

samuel@jesuscalls.org samueldhinakaranofficial

**உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்" (எபிரெயர் 1:3)** என்று வேதம் கூறுகிறது.

இயேசு, தேவ மகிமையின் பிரகாசமாயிருக்கிறார். அவர் தேவனுடைய தன்மையின் சொரூபமாயிருக்கிறார். அவரது வல்லமை சர்வத்தையும் தாங்குகிறது. கிறிஸ்து உங்களுக்குள் வாழும்போது, அவரது மகிமை உங்களை நிரப்பும். "**கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" (கொலோசெயர் 1:27)** என்று வேதம் கூறுகிறது.

தேவனுடைய மகிமையின் பிரகாசமான இயேசு உங்கள் உள்ளத்திற்குள் பிரவேசிக்கும்போது, அவரது தன்மை உங்களை மறுரூபமாக்குகிறது. அவரது வார்த்தை உங்களைப் பெலப்படுத்துகிறது; அவரது வல்லமை உங்களை தாங்குகிறது. நீங்கள் தேவ மகிமையை பிரதிபலிக்கிறவராக, செல்லுமிடமெங்கும் அவரது வெளிச்சத்தை கொண்டு செல்லுகிறவராக மாறுவீர்கள்.

சர்வத்தையும் தம்முடைய வார்த்தையினால் தாங்குகிற இயேசு உங்களுக்குள் ஜீவிக்கிறார். நட்சத்திரங்களை அவற்றின் இடத்தில் தாங்குகிற அதே வல்லமை உங்கள் வாழ்வில் கிரியை செய்கிறது. தேவன், உங்களை நேசிப்பதால், உங்களில் பிரியமாயிருப்பதால், உங்களை கனப்படுத்த வாஞ்சிப்பதால் உங்கள் வாழ்க்கையை முன்பை காட்டிலும் மகிமையுள்ளதாக மாற்ற தீர்மானித்துள்ளார்.

புத்தாண்டுக்குள் நுழைகிற வேளையில், நம் வாழ்வின் மகிமை முன்பு இருந்ததைக் காட்டிலும் பெரிதாயிருக்கும். நம்முடைய பெலனால் அல்ல; நமக்குள் இருக்கும் கிறிஸ்துவினால் அப்படியாகும். அவரே மகிமையின் நம்பிக்கையாயிருக்கிறார். ஆகவே, நாம் அவருடைய பிரகாசத்தில் நடப்போம்; அவருடைய ராஜ்யத்திற்காக வெளிச்சம் வீசுவோம். நாம் இயேசுவுடன் இருப்பதால், நமக்கு நன்மை வந்து சேரவேண்டும்.

வாழ்க்கையை மாற்றும் தேவ மகிமையை உணர்த்தும் வல்லமையான சாட்சியை உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன். அபினவ் லால் என்பவர் பத்தாம் வகுப்புப் படித்தபோது தனிமை உணர்வோடு போராடினார். நண்பர்களோடு அடிக்கடி சண்டையிட்டார். எதிர்காலம் நன்றாக அமையாதோ என்று பயந்தார். ஆனால், என் தந்தை Dr. பால் தினகரன் ஊழியம் செய்த ஒரு பிரார்த்தனை திருவிழாவில் அவர் கலந்துகொண்டபோது வாழ்வில் எல்லாமே மாறியது.

ஜெப வேளையில் என் தந்தை, ஜனங்களை பெயர் கூறி அழைக்கத் தொடங்கினார். அவர், "லால், நீங்கள் தேவனுக்கு விசேஷித்தவர். பயப்படாதிருங்கள். நீங்கள் ஒருபோதும் தனியே இருப்பதில்லை" என்று கூறினார். பயந்துகொண்டிருந்த லாலை இந்த வார்த்தைகள் தொட்டன. அவர் இயேசுவின் அளவற்ற அன்பை உணர்ந்தார். அவரது கலக்கம் சந்தோஷமாக மாறியது. அவர் சாட்சி கூறும்படி ஓடி, "நான்தான் அந்த லால்!" என்று சத்தமாகக் கூறினார். என் தந்தை, "ஆண்டவரே, இவருக்கு பொன்னான எதிர்காலத்தை தாரும்" என்று லாலுக்காக ஜெபித்தார்.

லாலின் வாழ்க்கை மறுரூபமானது. அவர் நன்றாக படித்தார். போட்டித் தேர்வில் வெற்றி பெற்றார். பெயர் பெற்ற கல்லூரியில் மெக்கானிக்கல் எஞ்ஜினியரிங் முடித்தார். சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டலில் பட்டமேற்படிப்பையும் முடித்தார். ஆண்டவர், லாலுக்கு நல்ல வேலையையும், அன்பான மனைவியையும் மகனையும் கொடுத்து ஆசீர்வதித்தார்.

தேவனுடைய அழைப்பை ஏற்று, லாலும் அவர் மனைவியும் ஒரு சபையை நடத்தத் தொடங்கினர். தங்கள் ஊழியத்தில் வல்லமையான அற்புதங்களை கண்டனர். ஒரு காலத்தில் தனிமையாய் உணர்ந்த லாலின் வாழ்க்கை, தேவ மகிமைக்காய் ஒளிவீசுவதாக மாறியது.

நீங்கள் உதவியற்ற நிலையில் இருப்பதாக, தனிமையில் இருப்பதாக, எதிர்காலத்தைக் குறித்து நிச்சயமற்றிருப்பதாக உணர்கிறீர்களா? லாலை போல நீங்களும் உங்கள் வாழ்க்கையை தேவனின் கரத்தில் ஒப்படைத்து, அவர் அற்புதத்தைச் செய்வார் என்று நம்புங்கள். தேவனுடைய வாக்குத்தத்தம் இன்றும் மாறாததாயிருக்கிறது. நீங்கள் முன்பு அனுபவித்ததைக் காட்டிலும் உங்கள் தற்போதைய வாழ்க்கையை அதிக மகிமையானதாக அவர் மாற்றுவார்.

உங்கள் வாழ்க்கையில் இயேசு கிரியை செய்யும்போது, தம்முடைய பிரசன்னத்தினாலும், வல்லமையினாலும், மகிமையினாலும் உங்களை நிரப்புகிறார். நீங்கள் ஒருபோதும் தனியே இருப்பதில்லை. அவரது அன்பு உங்களை முன்னோக்கி சுமந்துசெல்லும்; உங்கள் வாழ்க்கையை மறுரூபமாக்கும்.

இன்று அவரை நம்புங்கள். உங்கள் வாழ்வை அவர் எப்படி தம்முடைய மகத்துவத்துக்கு சாட்சியாக மாற்றுகிறார் என்பதை பாருங்கள். அன்பானவர்களே, இந்த ஆண்டு, நீங்கள் தேவ மகிமையோடு பிரகாசிக்கும் ஆண்டாக விளங்கும். அவருடைய சமுகத்தில் சஞ்சரியுங்கள். அவருடைய வாக்குத்தத்தத்தில் மகிழுங்கள். உங்கள் வாழ்க்கையை அவரது மகிமை அசாதாரணமானதாக மாற்றுவதை காணுங்கள். இந்த ஆண்டில் அவருடன் ஐக்கியப்பட்டு மகிழ்ந்திருங்கள்.

இளம் பங்காளர் திட்டம்

*கேரள மாநிலம் கோட்டயத்தை சேர்ந்தவர் ஏஞ்சல் எல்சா வினோத். இவர் இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர். ஆண்டவர் தன் வாழ்வில் செய்த ஆச்சரியமான அற்புதங்கள் குறித்து அவர் பகிர்ந்துகொண்டிருக்கிறார்.*





# வாழ்வில் உயரே எழுந்த ஏஞ்சல் எல்சா வினோத்தின் சாட்சி

நர்ஸ் வேலைக்கான ஆங்கில மொழி தேர்வை (OET) ஆகஸ்ட் 31-ம் தேதி ஏஞ்சல் எழுதவேண்டியதிருந்தது. ஆங்கில மொழியை கேட்பதிலும் பேசுவதிலும் தனக்கு இருக்கும் சிரமங்களை குறிப்பிட்டு தனக்காக ஜெபிக்கும்படி, தேர்வுக்கு முன்னர் அவர் Dr. பால் தினகரனுக்கு மின்னஞ்சல் அனுப்பியிருந்தார். அதற்கு Dr. பால் தினகரன் எழுதியிருந்த பதில், ஆறுதலையும் வெற்றியை குறித்த நிச்சயத்தையும் ஏஞ்சலுக்கு கொடுத்தது. தேர்வுக்கு முந்தைய தினமும், தேர்வு நாளன்றும் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஜெபித்தார். அது ஏஞ்சலின் விசுவாசத்தை பெலப்படுத்தி, திடநம்பிக்கையை கொடுத்தது.

தேர்வில், மொழியை கேட்கும் பகுதி கடினமாக இருந்தது. ஆனாலும், ஆண்டவர் தன்னை கைவிட மாட்டார் என்று ஏஞ்சல் உறுதியாக நம்பினார். தேர்வு முடிவுகள் வெளிவந்தபோது, தான் எதிர்பார்த்திருந்த தற்கும் மேலாக ஆண்டவர் தன்னை ஆசீர்வதித்திருப்பதை கண்டு அதிகமாய் மகிழ்ந்தார். முதன்முறை தேர்வு எழுதிய நிலையில் B தரம் பெற்று அவர் தேர்ச்சியடைந்திருந்தார். தன்னுடைய ஞானத்தினால் இந்த வெற்றி கிடைக்கவில்லை; ஞானத்தின் ஆதாரமாகிய ஆண்டவரால்தான் கிடைத்தது என்று அவர் அறிக்கையிட்டார்.

பின்னர், பட்டப்படிப்புக்கான மத்திய அரசின் கல்வி ஊக்கத்தொகை குறித்து ஒரு ஜெப விண்ணப்பத்தை ஏஞ்சல் அனுப்பினார். ஏஞ்சலின் ஆதார் அட்டையில் இருந்த பிரச்னை காரணமாக, படிப்பின் கடைசி ஆண்டில் வரவேண்டிய தொகை வந்து சேரவில்லை. பணம் அவசரமாக தேவைப்பட்ட நிலையில் ஏஞ்சல் மிகவும் வருத்தமடைந்தார். அது தொடர்பாக பல மாதங்கள் உரிய அதிகாரிகளை தொலைபேசி மூலமும் மின்னஞ்சல் மூலமும் தொடர்புகொண்டும் பலன் கிடைக்கவில்லை. அப்போது, கல்வி ஊக்கத்தொகை கிடைத்தால், அதில் ஒரு பங்கை இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு காணிக்கையாக கொடுப்பதாக பொருத்தனை செய்து ஜெபித்தார்.

ஏஞ்சல் எழுதிய OET தேர்வு முடிவுகள் வெளிவந்த மறுநாள், கல்வி ஊக்கத்தொகை வங்கிக் கணக்குக்கு வந்து சேர்ந்தது. இதனால் தேவன் தன்பேரில் கரிசனையாயிருக்கிறார் என்று ஏஞ்சல் கொண்டிருந்த விசுவாசம் பெலப்பட்டது. பொருத்தனை செய்தபடியே இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு ஸ்தோத்திர காணிக்கை அனுப்பி வைத்தார்.

ஏஞ்சல், தேவன் தனக்கு அளித்த பரிபூரண ஆசீர்வாதங்களுக்காக அவரை ஸ்தோத்திரிக்கிறார். இளம் பங்காளர் திட்டம் மூலம் தனக்காக ஜெபித்து தாங்கியதற்காக Dr. பால் தினகரனுக்கும் இயேசு அழைக்கிறார் ஜெப வீரர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இளம் பங்காளர் திட்டம் வாயிலாக வெளிப்படும் ஜெபத்தின் வல்லமைக்கு ஏஞ்சல் சாட்சியாக இருக்கிறார். இந்தத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து வல்லமையான அற்புதங்களை பெற்றுக்கொள்ளலாம்.

---

இளம் பிள்ளைகளுக்காக மன்றாடி ஜெபிப்பதற்காக தேவனுடைய வழிநடத்துதலின்படி இளம் பங்காளர் திட்டம் தொடங்கப்பட்டது. தேவன், அந்நிய தேசத்தில் தானியேலுக்கு ஞானத்தையும் தயவையும் பாதுகாப்பையும் அருளியதுபோன்று, இன்றைய இளைஞர்களின் வாழ்வில் தேவன் வல்லமையாக செயல்படவேண்டுமென்று ஜெபிப்பதே இத்திட்டமாகும் (தானியேல் 1:17; 6:22).

Dr. பால் தினகரன் குடும்பத்தினரும், ஜெப கோபுரத்திலுள்ள ஜெப வீரர்களும் அருமையான இளம் பங்காளர்களுக்காக கடந்த 39 ஆண்டுகளாக தினமும் ஜெபித்து வருகிறார்கள். இந்த ஜெபத்தைக் கேட்டு இளம் பங்காளர்களை படிப்பிலும், வேலையிலும், தொழிலிலும், குடும்ப வாழ்க்கையிலும் ஆசீர்வதித்து வருகிறார். இளம் பங்காளர்களின் வாழ்வில் தேவன் எவ்வளவு உண்மையுள்ளவராய் இருந்து வருகிறார் என்பதைக் குறித்து கணக்கற்ற சாட்சிகள் எங்களுக்கு வருகின்றன.

### இளம் பங்காளருக்கான ஆசீர்வாதங்கள்

இளம் பங்காளரின் பெயர்களை 'இயேசு அழைக்கிறார்' ஜெப கோபுரத்தில் ஜெப வீரர்கள் அனுதினமும் உச்சரித்து, இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெய்வீக ஆசீர்வாதங்களை அவர்கள் பெறும்படி ஜெபிக்கிறார்கள்.

இளம் பங்காளருக்கு பிறந்தநாளின்போது ஜெபம் ஏறெடுக்கப்படுவதோடு, விசேஷ வாழ்த்து அட்டை அனுப்பி வைக்கப்படும். இளம் பங்காளர்களுக்கு சான்றிதழும் அனுப்பி வைக்கப்படும். பங்காளர் கூட்டங்களில் Dr. பால் தினகரன் குடும்பத்தினர் இளம் பங்காளர்களை நேரில் சந்தித்து ஜெபிப்பார்கள்.



## இளம் பங்காளர் திட்டத்தில் இணைந்திடுங்கள்

நீங்கள் இதுவரையிலும் இளம் பங்காளராக இணையாதிருந்தால், இப்படிவத்தை நிரப்பி இத்திட்டத்தில் இணைந்துகொள்ளலாம்.

**பதிவுக்கு தேவையான விவரங்கள்:**

திரு / செல்வி.......................................................................................................................................

பிறந்த தேதி: ..................................... பெற்றோர் / காப்பாளர் பெயர்: .................................................

தொடர்பு முகவரி: ............................................................................................................

நகரம்: ............................ பின்கோடு: ................................ மொபைல் எண்: ......................................

மின்னஞ்சல் முகவரி: ............................................. வாட்ஸ்அப்: ...................................................

**மேலும் விவரங்களுக்கு:**

* முகவரி: ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, சென்னை 600 028 * வாட்ஸ்அப்: 98409 00477

* இணையதளம்: www.jesuscalls.org * மின்னஞ்சல்: ypp@jesuscalls.org

* ஜெப கோபுரம்: உங்கள் பகுதியிலிருக்கும் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை அணுகலாம்

* தொலைபேசி: 044-23456677 என்ற பங்காளர் சேவை எண்ணை (காலை 8 முதல் இரவு 8 மணி வரை - இந்திய நேரம்) தொடர்புகொள்ளலாம்

இளம் பங்காளர் சான்றிதழில் இடம் பெறுவதற்காக புகைப்படம் ஒன்றினை ypp@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு பெயர் மற்றும் பிறந்ததேதி குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

**இளம் பங்காளர் திட்டத்திற்குக் காணிக்கை அனுப்பும் வழிகளை இந்த இதழின் 21-ம் பக்கத்தில் காணலாம்.**

சிறுவர் பகுதி



# ஜிம் & ஜெமி
















**கதையின் நீதி:**

நன்மை செய்யும்படி நம்மை வழிநடத்துகிற நண்பர்களை தெரிந்துகொள்வது முக்கியம். உண்மையான நண்பர்கள், நல்லவற்றை செய்வதற்கு நம்மை உற்சாகப்படுத்துவார்கள்.

மனப்பாட வசனம்:

**மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் (1 கொரிந்தியர் 15:33)**



## புத்தாண்டு தீர்மானங்கள்

# தேவனுக்கு முன்பாக தீர்மானங்களை காத்துக்கொள்ளுங்கள்

புத்தாண்டு தொடங்கும் வேளையில், நம் திட்டங்களை தேவனுக்கு ஒப்படைத்து, அவரை கனப்படுத்தும்விதமாக வாழ நம்மை அர்ப்பணிக்கலாம். தேவனுடைய சித்தத்திற்கு ஏற்ப நாம் தீர்மானங்களை செய்து, அவருடைய பெலத்துடன் அவற்றை நிறைவேற்றினால் அவை அர்த்தமுள்ளவையாக அமையும். தேவனுடைய வார்த்தையினால் வழிநடத்தப்பட்டு, அவருக்கு முன்பாக நம் தீர்மானங்களை காத்துக்கொள்வதில் கவனமாக இருப்போம்.

**1. உங்கள் திட்டங்களை ஆண்டவருக்கு அர்ப்பணியுங்கள்**

எல்லா தீர்மானங்களையும் ஜெபித்து, தேவனுடைய வழிகாட்டுதலை நாடி தொடங்குங்கள். "உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்" (நீதிமொழிகள் 16:3) என்று வேதம் கூறுகிறது. உங்கள் இலக்குகளை தேவனிடம் ஒப்படைத்து, அவருடைய ஞானம் உங்களை வழிநடத்தும் என்று நம்புங்கள்.

**2. சிறிய அளவில் ஆனால் உண்மையாக தொடங்குங்கள்**

அற்பமான ஆரம்பத்தையும் உண்மையையும் தேவன் கனம்பண்ணுகிறார். "கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்" (லூக்கா 16:10). செய்துமுடிக்கக்கூடிய இலக்குகளை நிர்ணயியுங்கள்; இடைவிடாமல் தொடர்ந்து உழைத்திடுங்கள். அப்போது மலைப்பு ஏற்படாது.

**3. தேவ பெலனை சார்ந்திருங்கள்**

மனுஷீக பெலன் மட்டுமே போதாது. ஆனால், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம்மை பெலப்படுத்தக்கூடியவை. "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13) என்று திடநம்பிக்கையுடன் அறிக்கையிடுவோம். சவால்கள் வரும்போது, தேவனுடைய கிருபையையே சார்ந்துகொள்ளுங்கள்.

**4. சோதனைக்கு எதிர்த்து நில்லுங்கள்; கவனத்தை சிதறவிடாதிருங்கள்**

நாம் செய்த தீர்மானத்தை கைவிடும்படி அல்லது பழைய பழக்கவழக்கங்களுக்கு திரும்பும்படி சோதனைகள் வரலாம். ஆனால், அதை தாண்டுவதற்கு நமக்கு உதவி செய்ய தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல்..." (1 கொரிந்தியர் 10:13). நீங்கள் பெலவீனமாக உணரும் தருணங்களில் தேவனுடைய பெலத்திற்காக ஜெபியுங்கள்; அவருடைய வார்த்தையின் வழிகாட்டுதலை தேடுங்கள்.

**5. பொறுப்பை உணருங்கள்**

உங்கள் நம்பிக்கைக்கு உரியவர்களிடம் நீங்கள் செய்திருக்கும் புத்தாண்டு தீர்மானங்களை பகிர்ந்துகொள்ளுங்கள். அவற்றில் நீங்கள் தவறாதிருப்பதற்கு அவர்கள் உங்களை ஊக்கப்படுத்துவார்கள். "இரும்பை இரும்பு கருக்கிடும்; அப்படியே மனுஷனும் தன் சிநேகிதனுடைய முகத்தைக் கருக்கிடுகிறான்" (நீதிமொழிகள் 27:17) என்று வேதம் கூறுகிறது. ஐக்கியமும் பொறுப்புணர்வும் தீர்மானங்களை கைக்கொள்ள நம்மை பெலப்படுத்தும்.

இந்த வழிமுறைகளை நாம் கைக்கொண்டால், நம்முடைய தீர்மானங்களைக் குறித்து அர்ப்பணிப்போடு இருப்பதோடு ஆண்டு முழுவதும் தேவனை கிட்டிச்சேரவும் முடியும். தேவனுடைய வல்லமையை நம்மை மறுரூபமாக்கி, நாம் நடக்கும்போது நம்மை வழிநடத்தும் என்று நம்பி, இந்த புத்தாண்டை அவருக்கு அர்ப்பணிப்போம். "உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்" (1 தெசலோனிக்கேயர் 5:24)

- சாமுவேல் தினகரன்.



**2025**

**புது வருட நற்செய்தி!**

# “விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்!”

(கலாத்தியர் 3:9)



- சகோதரி ஸ்டெல்லா தினகரன்

புது வருடத்திற்குள்
பிரவேசித்திருக்கிற நாம்
ஒவ்வொருவரும் விரும்புவது
**“கர்த்தருடைய ஆசீர்வாதம்”.**

உலகப்பிரகாரமாக நாம் நம்முடைய பிறந்த நாளைக் கொண்டாடும்பொழுது, மற்றவர்களிட மிருந்து “பரிசுகளை” எதிர்பார்க்கிறோம். அதுபோன்றே பக்தனாகிய யாக்கோபு, “ஆண்டவரே, நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய நான் உம்மை போகவிடேன்” என்று நம்முடைய பரம தகப்பனாகிய தேவாதி தேவனை நோக்கிப் பார்த்து, அவரை உறுதியாகப் பற்றிக்கொண்டபொழுது, கர்த்தர் அவன் பெயரையே மாற்றி, அவனுக்கு “இஸ்ரவேல்” என்று பெயர் சூட்டி, சந்ததி சந்ததியாக, ஜாதி ஜாதியாக அவனை ஆசீர்வ தித்து பெருகச் செய்தாரல்லவா? அவ்வாறே இந்த புது ஆண்டில் கர்த்தர் உங்களையும் பெருகச் செய்வார்.

**நீங்கள் விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக!**
(கொலோசெயர் 2:7)

எப்பொழுது நம் விசுவாசம் உறுதிப்படும்? முந்தின வசனத்தை வாசித்துப்பாருங்கள். முதலாவது, கர்த்த ராகிய இயேசுவை “இரட்சகராக” ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேதம் கூறுகிறது. பவுல் எவ்வாறு தன் அனுபவத்தை விவரிக்கிறான் பாருங்கள்!

**“கிறிஸ்துவுடனேகூட சிலுவையிலறையப்பட் டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத் திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவ னுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்” (கலாத்தியர் 2:20)**

என்றபடி, கிறிஸ்துவோடுகூட சிலுவையில் அறையப் பட்டு, தன் பாவங்களுக்கெல்லாம் செத்து, அவருடைய பரிசுத்த இரத்தத்தினாலே கழுவி சுத்திகரிக்கப்பட்டு, புது மனுஷனாக, நீதியின் ஆயுதமாக எந்த மனிதனும் மாறுகிறான். தேவ குமாரனைப் பற்றும் விசுவாசத்தி னால், அவரது இரத்தத்தினால் பழைய பாவ மனுஷன் சுத்திகரிக்கப்பட்டு, எல்லாம் புதிதானவைக ளாக கிறிஸ்துவுக்குள் பிழைத்திருக்கிறான்.

அருமையானவர்களே! நாம் ஒவ்வொருவரும்கூட இந்த தெய்வீக அனுபவமாகிய, கிறிஸ்துவுக்குள் புது ஜீவன் பெற்றவர்களாக விளங்க வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இன்றைக்கு எத்தனைபேர் உங்கள் சொந்த வாழ்விலே இத்தகைய தெய்வீக அனுபவத்தை பெற்றிருக்கிறீர்கள்? “நான் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டி” என்று உங்களால் சொல்ல முடியுமா? ஆம்! இதை நம் ஒவ்வொரு வருக்கும் அருளிச் செய்யவே இயேசு இவ்வுலகில் மானிடராகப் பிறந்தார். இதைத்தான், மத்தேயு 10:38-ல், “தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றாதவன் எனக்கு பாத்திரன் அல்ல” என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். இதை வாசிக்கிற நீங்கள் உங்கள் வாழ்விலே இவ்வித மான தெய்வீக அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளா விடில், நீங்கள் இருக்கிற இடத்தில் அப்படியே முழங்கால்படியிட்டு, கர்த்தரை நோக்கி இவ்விதமாக பிரார்த்தனை பண்ணுங்கள். “ஆண்டவராகிய இயேசுவே! சிலுவையிலே எனக்காக நீர் அடிக்கப் பட்டு, நொறுக்கப்பட்டு, உம்முடைய இரத்தத்தை சிந்தி, வேதனைகளை பொறுமையோடு சகித்தீரே, உமக்கு நன்றி ஐயா! நீர் இவ்விதமாக பாடுபட்டு சம்பாதித்த இரட்சிப்பினால் என்னை அலங்கரித்து, உமக்கு சொந்தமான பிள்ளையாக என்னை ஏற்றுக்கொள் ளும். உம்முடைய அன்பிற்காக நன்றி சொல்லி உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இன்று முதல் நான் உமக்கு சொந்த ஜனமாக மாறும்படி அருள்புரிகிறதற் காக உமக்கு ஸ்தோத்திரம்” என்று முழு இருதயத் தோடே உங்களுடைய வாழ்வை அவருடைய பாதத்தில் அர்ப்பணியுங்கள்!

இவ்வாறு அப்பணித்த சவுல், ‘‘பவுல்’’ என்ற தேவ மனிதனாக மாறி, எவ்வளவாய் தானும் ஆசீர்வதிக்கப் பட்டு, மற்றும் அநேகருக்கு ஆசீர்வாதமாக விளங்கி னான் என்று வேதத்தில் வாசிப்பதுபோன்று, இந்த புதிய ஆண்டிலே, கர்த்தர் உங்கள் வாழ்வையும் அவ்வாறே மாற்றி, அநேகருக்கு உங்களை ஆசீர்வாத மான பாத்திரமாக அலங்கரிப்பாராக!

இவ்விதமாகத்தான், தேவன் கிருபையாக எங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவர் வாழ்வையும் ஆசீர் வதித்து, இன்று நாங்கள் குடும்பமாக அவருடைய ஊழியத்தை செய்யும் தெய்வீக ஆசீர்வாதத்தை அருளிச் செய்திருக்கிறார்.

**விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்!**

(ரோமர் 1:17; கலாத்தியர் 3:11; எபிரெயர் 10:38)

‘‘**அவரை விசுவாசிக்கிறவன் வெட்கப்படுவ தில்லை**’’ **(ரோமர் 10:11)**

என்றெல்லாம் வேதம் நமக்கு போதிக்கிறது. தாவீது, தானியேல், யோபு போன்ற பக்தர்கள் துயரம், துன்பம், சோதனை வழியே கடந்துசெல்ல நேரிட்ட வேளை களிலெல்லாம், கர்த்தர்மேல் தங்கள் முழு விசுவாசத்தை யும் வைத்து, ஜெயம் பெற்றார் கள்! தாவீது தன் இளம் வயதிலேயே கர்த்தர் மேல், அவருடைய நாமத்தின் மேல் தன் முழு விசுவாசத்தையும், முழு நம்பிக்கையையும் வைத்து, அதன் வாயிலாக கோலியாத் என்ற பெலிஸ்த வீரனை ஜெயித்தான் (1 சாமுவேல் 17:45-47).

**இந்த புதிய ஆண்டிலே, கர்த்தர் உங்களை அநேகருக்கு ஆசீர்வாதமான பாத்திரமாக அலங்கரிப்பார்**

அருமையானவர்களே! உங்களுக்குள்ளே இத்த கைய விசுவாசம் உண்டா? இவ்விதமாக உங்கள் வாழ்க்கையிலே தேவன்மேல் விசுவாசம் பெருகும் படிக்கு நீங்கள் செய்ய வேண்டுவது என்ன?

‘‘**விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவ னுடைய வசனத்தினாலே வரும்.**’’ **(ரோமர் 10:17)**

‘‘**உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும், என் இருத யத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது;...**’’ **(எரேமியா 15:16)**

மார்த்தாள், மரியாள் என்ற சகோதரிகளில், மரியாள் எப்பொழுதும் ஆண்டவராகிய இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, பயபக்தியோடு அவருடைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்ததினிமித்தம், ‘‘மரியாள், தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்’’ என்று ஆண்டவரே கூறினார் அல்லவா? (லூக்கா 10:38-42).

ஆம்! பிரியமானவர்களே! நீங்களும் இவ்விதமாக கர்த்தர்மேல் உங்கள் முழு விசுவாசத்தையும் வைத்து, நீதியின் வழிகளில் நடப்பீர்களானால், உங்கள் வாழ் விலும் இவ்விதமாக அற்புதங்களையும், அடையாளங் களையும் காண்பீர்கள்!

**நீதியின் கிரீடம் பெறும்படியான தெய்வீகமான விசுவாச வாழ்வை கர்த்தர் தந்தருளுவார்**

(2 தீமோத்தேயு 4:7,8)

ஆண்டவர் இயேசு, ‘‘**இந்த உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு; ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்**’’ என்றார் (யோவான் 16:33). தேவ ஊழியனாகிய பவுல் அப்போஸ்தலன், கர்த்தருக்கென்று உண்மையாய் ஊழியம் செய்ததினி மித்தம், எவ்வளவோ பாடுகள், துன்பங்கள், உபத்திர வங்கள் வழியாக அவன் கடந்துசென்றான். அப்படிப் பட்ட வேளைகளிலெல்லாம், கர்த்தர்மேல் அவன் வைத்திருந்த உண்மை, விசுவாசம், உத்தம பக்தி போன்றவைகளினிமித்தமும், கர்த்தருடைய ஊழியத் தில் அவன் காண்பித்த வைராக்கியத்தினிமித் தமும் சிறையில் அடைக்கப்பட்டு, கால்கள் தொழுமரத்தில் மாட்டப்பட்டு, வேதனை யோடிருந்த வேளையில் அவன் செய்தது என்ன? அப்போஸ்தலர் 16:25-ன்படியே, நடு இராத்திரியிலே சீலாவும், அவனுமாக ஜெபம்பண்ணி, தேவனை துதித்துப்பாடினார்கள். உட னிருந்த யாவரும் அதை கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கர்த்தர் தம்முடைய வல்லமையுள்ள கரங்களை நீட்டினார். அங்கு பூமி அதிர்ச்சி உண்டானது. கதவுகள் யாவும் திறவுண்டன. கட்டுகள் யாவும் கழன்று போயின. அந்த அற்புதத்தைக் கண்ட அந்த சிறைச்சாலைத் தலைவன் குடும்பமாக அந்த வேளையில் தானே தேவனிடத்தில் விசுவாசமுள்ளவ னாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்.

அருமையானவர்களே, ஒவ்வொருநாளும் நீங்கள் கர்த்தரை பயபக்தியோடு தேடும்பொழுது, அவர் உங்கள் வாழ்வின் உண்மையையும், பயபக்தியை யும் பார்த்து, உங்கள் வாழ்வை தமது சம்பூரணமான ஆசீர்வாதங்களால் நிரப்புவார். அதோடுகூட, கிறிஸ்து வுக்கென்று பயபக்தியோடு வாழ்கிற உங்கள் வாழ்வில் நீங்கள் சந்திக்கிற பற்பல பாடுகள், துன்பங்கள் யாவற் றின் மத்தியிலேயும், பரிசுத்த ஆவியானவரின் துணையோடு, நீங்கள் விடுதலையையும் வெற்றியை யும் பெற்று வாழும் பாக்கியத்தை அவரே உங்களுக்கு தந்தருவார்.

கர்த்தர் தாமே இந்த புதிய ஆண்டிலே இப்படிப்பட்ட மேலான ஆசீர்வாதங்கள் நிறைந்த உன்னதமான தெய்வீக வாழ்வை உங்கள் ஒவ்வொருவருக்கும் தந்து வழிநடத்துவாராக!

# கிறிஸ்துவுக்காக எழும்பிப் பிரகாசிக்கிற ஓர் நட்சத்திரம்





1996-ம் ஆண்டு, ஜூன் மாதம் சென்னையில் நடைபெற்ற இயேசு அழைக்கிறார் பெண்கள் மாநாட்டில் நான் மிகவும் விரக்தியோடும், மன வேதனையோடும் கலந்துகொண்டேன். அன்று அம்மா ஸ்டெல்லா தினகரன் அவர்கள் கொடுத்த தேவ செய்தி என் இருதயத்தை உடைத்தது. அன்றே நான் இயேசப்பாவிடம் என்னை ஒப்புக்கொடுத்தேன். அம்மா அவர்கள் ஜெப வேளையில், யாரெல்லாம் எஸ்தர் ஜெபக்குழுவில் என்னோடு இணைந்து ஜெபிக்க விரும்புகிறீர்களோ, இரண்டாவது சனிக்கிழமை ஜெபகோபுரத்திற்கு வாருங்கள் என்றார்கள். அந்த மாதமே ஜெபகோபுரத்திற்கு வந்து எஸ்தர் ஜெபக்குழுவில் இணைந்தேன். அந்நாளிலிருந்து இன்றுவரை ஜெபக்குழுவில் இடைவிடாமல் ஜெபித்து வருகிறேன். விசுவாசத்தில் எப்படி கட்டப்பட வேண்டும், கர்த்தருக்கென்று எப்படி எழும்பிப் பிரகாசிக்க வேண்டும், கடின உழைப்பு, உண்மை, உத்தமமாய் வாழ்வது போன்ற அனுபவங்களை அம்மாவிடமிருந்து கற்றுக்கொண்டேன். அதன்படி நான் வாஞ்சையோடு செயல்படுவதை பிறர் கண்டு, இதையெல்லாம் எப்படி செய்கிறீர்கள்? என்று ஆச்சரியத்துடன் கேட்கும்படி கர்த்தர் என்னை நடத்தி வருகிறார்.



முதல் நாளில் ஜெபிக்கும்போது, தேவனுடைய பிரசன்னத்தை முழுமையாகப் பெற்றேன். பெண்களின் வாழ்க்கையில் இப்படியெல்லாம் இருக்கிறதா? என்று எனக்குள் பாரம் வந்தது. கர்த்தர் பலவிதங்களிலும் என் சிறையிருப்பை மாற்றினார் (யோபு 42:2). குடிசை வீட்டில் இருந்த எனக்கு, 1997-ல் அற்புதமாக அழகான மாடி வீட்டைக் கட்டி கொடுத்தார். என் குடும்பத்தில் பலவிதமான போராட்டங்கள், இழப்பு, சமாதானமின்மை, பணப்பிரச்னை போன்ற பலவித பாடுகள் வந்தன. அவைகளின் மத்தியிலும் கர்த்தரை உறுதியாகப் பற்றிக்கொண்டு, எனது மூன்று பிள்ளைகளையும் பயபக்தியுடன் வளர்க்க அவரே கிருபை செய்தார்.

2005ஆம் ஆண்டு, எங்கள் வீட்டில் எஸ்தர் ஜெபக் குழுவை முதல்முதலாக ஆரம்பித்தேன். முதல் நாளில் 8 சகோதரிகள் கலந்துகொண்டார்கள். அவர்களுக்கு சரியாக ஜெபிக்கத் தெரியாது. ஆகவே, “நீங்கள் ஜெபக்குறிப்பை சொல்லி, இயேசப்பா இந்த ஜெபத்தினை ஏற்று பதில் தாரும் என்று ஜெபியுங்கள்” என்றேன். அப்படியே ஜெபித்தார்கள். கர்த்தர் படிப்படியாக அவர்களை ஜெப ஆவியினால் நிரப்பி, அபிஷேகித்தார். அன்பு அம்மா அவர்கள், சென்னையிலுள்ள எஸ்தர் ஜெபக்குழுக்களை 9 பகுதியாகப் பிரித்தார்கள். அதில் இரண்டாவது பகுதியை ஏற்று நடத்த ஒருங்கிணைப்பாளராக எனக்கு பொறுப்பு கொடுத்து செயல்பட வைத்தார்கள்.

அதன்பின்பு, எனக்கு ஆவிக்குரிய ஜீவியத்தில் மிகுந்த போராட்டம் ஏற்பட்டு, ஒருவிதமான தள்ளப்பட்ட சூழ்நிலையில் காணப்பட்டேன். அப்பொழுது நான், எந்த இடத்தில் வெட்கப்படுகிறேனோ, அதே இடத்தில் என் தலையை உயர்த்தும் என்று மிகுந்த தாழ்மையோடு கர்த்தருடைய பாதத்தை பற்றிப் பிடித்து ஜெபித்தேன் (சங்கீதம் 16:8). கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டு (ஏசாயா 61:7), மீண்டுமாக அதே இடத்தில் ஊழியத்தை தொடர்ந்து செய்யும்படி கிருபை செய்தார். நான் எங்கெல்லாம் போகிறேனோ, அங்கெல்லாம் எஸ்தர் ஜெபக்குழுவை பற்றி கூறி ஜெபித்து, ஆத்துமாக்களை வழிநடத்தி, அநேக எஸ்தர் ஜெபக் குழுக்களை உருவாக்க கர்த்தர் கிருபை செய்து வருகிறார். நானும், என் கணவரும் இணைந்து, தம்பதியர் எஸ்தர் ஜெபக்குழுவை நடத்துகிறோம். நான்கு விதத்தில் எஸ்தர் ஜெபக்குழுக்களை கர்த்தர் எங்கள் பகுதியில் உருவாக்கினார்.

எங்கள் பகுதியில் எஸ்தர் ஜெபக்குழு எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. நான் பலரைத் தொடர்புகொண்டபோது, முதலில் அநேகர் என்னை உதாசீனப்படுத்தினார்கள். பின்பு, மாதந்தோறும் சனிக்கிழமை நடைபெறும் தடைப்பட்ட குழுக்களுக்காக ஏறெடுக்கும் ஜெபத்தில் ஜெபித்து, மீண்டும் அதே நபர்களை நாடி சென்றபோது, அவர்கள் தானாகவே முன்

வந்து, ஜெபத்தை மீண்டும் நடத்துகிறோம் என்று சொல்லி, தொடர்ந்து எஸ்தர் ஜெபக்குழுவை நடத்தி வருகிறார்கள். 2024-ம் வருடத்தில் எங்கள் பகுதியில் 30 புதிய குழுக்களை கர்த்தர் எழுப்பியிருக்கிறார். இது எங்கள் கண்களுக்கு ஆச்சரியமாக உள்ளது. இப்போது 84 குழுக்களை கர்த்தர் கொடுத்துள்ளார்.

கர்த்தர் எங்கள் வாழ்விலும், எங்கள் குடும்பத்திலும் நிறைவான ஆசீர்வாதத்தைக் கொடுத்திருக்கிறார். 31.05.2013-ல் சென்னை மாநகராட்சியில் தட்டச்சராக பணியில் சேர்ந்த எனக்கு உதவியாளராக பதவி உயர்வு கொடுத்து அற்புதமாக என்னை நடத்தி வருகிறார். அன்பு தாயார் ஸ்டெல்லா தினகரன் அவர்கள் வாழ்விலிருந்து நான் கற்றுக்கொண்டதை, ஆவியானவரின் ஆலோசனையின்படி நிறைவேற்றுவேன். கர்த்தருக்கே மகிமை.

- சகோதரி **ஜெயராணி,** வியாசர்பாடி, சென்னை.




இன்றைய நாட்களில், வாலிபப் பெண்கள் தங்கள் இஷ்டம்போல் நடந்து, ஆண்டவருக்கு பிரியமில்லாத வாழ்க்கை வாழ்ந்து, அவருடைய ஆசீர்வாதங்களை இழந்து தவிப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அப்படிப் பட்ட வாலிபப் பெண்கள், ஆண்டவருடைய ஆசீர்வாதத்தையும், தங்கள் பிரச்னைகள், கட்டுகளிலிருந்து விடுதலையையும் பெற்று, அவருக்கு சாட்சியாக வாழ, அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்ற பாரத்தை பரிசுத்த ஆவியானவர் அன்பு தாயார் ஸ்டெல்லா தினகரன் அவர்களுக்கு கொடுத்து, 2003, ஜனவரி 13-ம் தேதியன்று அவ்வாறு ஆரம்பிக்கப்பட்டதுதான், "**வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழு**" ஆகும். இதில், 14 வயது முதல் 25 வயதிற்குட்பட்டவர்களும், ஜெபிக்க வாஞ்சையுள்ளவர்களுமாகிய வாலிபப் பெண்கள், மாதத்தில் ஒருநாள், ஒரே ஒரு மணிநேரம், குறைந்தபட்சம் 4 பேர் முதல் அதிக பட்சம் 10 பேர் ஒன்றாகக்கூடி, அன்பு தாயார் அனுப்பும் 10 ஜெபக் குறிப்புகளுக்காக கருத்தாய் ஜெபிக்கிறார்கள். இந்த வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழு, இந்தியா மட்டுமல்ல, இலங்கை, இங்கிலாந்து, ஓமன், தென் ஆப்பிரிக்கா போன்ற அயல்நாடுகளிலும்கூட ஆரம்பிக் கப்பட்டு, தற்போது 300-க்கும் மேற்பட்ட ஜெபக் குழுக்கள் தடையின்றி நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு மற்ற வாலிபப் பெண்களின் பாரங்களை தங்களுடைய பாரமாக எடுத்து அவர்களுக்காக ஜெபிப்பதினிமித்தம், இன்றைக்கு அநேகம் வாலிபப் பெண்கள் ஆண்டவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ்ந்து, அவருக்கென்று எழும்பிப் பிரகாசிக்கிறார் கள். மட்டுமல்ல, அவர்கள் தங்கள் உலக வாழ்க்கையிலும் ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை நிறைவாய் பெற்று, சாட்சிகளாக திகழ்கிறார்கள். அவ்வாறு ஆசீர்வாதம் பெற்ற ஒருவரின் சாட்சியை கீழே பிரசுரிக்கிறோம்.

### கர்த்தர் என் தேவைகளை சந்தித்தார்!



நான் வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழுவை நடத்தி வருகிறேன். தேவன் என் உள்ளத்தில் வாலிபப் பெண்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்ற பாரத்தை ஊற்றினார். அவ்வாறே நானும் என் தோழிகளும் இந்த ஜெபக்குழுவில் இணைந்து, அன்பு தாயார் அனுப்பும் ஜெபக்குறிப்புகளுக்காக தவறாமல் ஜெபிக்கிறோம். நான் மற்றவர்களுக்காக ஜெபித்ததினிமித்தம், 12-ம் வகுப்பு தேர்வில் நல்ல மதிப்பெண்கள் எடுக்க கர்த்தர் கிருபை செய்தார். அதன்பின்பு, என்னுடைய மேற்படிப்பு காரியத்தில், எந்த படிப்பை தேர்வு செய்வது? என்று குழப்பத்தில் இருந்தேன். அதற்காக நாங்கள் நடத்தும் வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழுவில் ஜெபித்தோம். அன்பு தாயார் அவர்களும் எனக்காக பாரத்தோடு ஜெபித்து கடிதம் அனுப்பினார்கள். கர்த்தர் ஜெபங்களையெல்லாம் கேட்டு, நல்லதொரு கல்லூரியில், Dialysis Technology படிக்க எனக்கு கிருபை செய்தார். என்னுடைய கல்லூரியின் கல்விக் கட்டண தேவைகளையும்கூட சந்தித்தார். மட்டுமல்ல, என் குழுவில் ஜெபிக்கும் என் தோழிகளுக்கும் தேவன் அற்புதங்களை செய்திருக்கிறார். தேவாதி தேவனுக்கே கோடானகோடி ஸ்தோத் திரங்களைஏறெடுக்கிறேன்.

**- A. ரெபேக்காள் பிரசன்னா,** சென்னை.

**மேலும் விவரங்களுக்கு:** சகோதரி ஸ்டெல்லா தினகரன், (வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழு),
16, டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, சென்னை - 600 028.
மின்னஞ்சல்: epg@jesuscalls.org

# இன்றைய இறை தியானம்

ஜனவரி - 2025



**1** **எசேக்கியேல் 34:26 - ஆசீர்வாதமான மழை**
**தியானத்திற்கு:** லேவி. 26:4; உபா. 28:12; சங்கீதம் 68:9

**2** **ஏசாயா 58:11 - கர்த்தர் நம்மை நடத்துகிறவர்**
**தியானத்திற்கு:** உபா. 8:2; சங்கீதம் 48:14; யோவேல் 2:26

**3** **யோசுவா 3:7 - கர்த்தர் உங்களை மேன்மைப்படுத்துவார்**
**தியானத்திற்கு:** உபா. 28:1; யோசுவா 4:14; ஏசாயா 55:5

**4** **சங்கீதம் 91:11 - கர்த்தர் உங்களைக் காக்கிறவர்**
**தியானத்திற்கு:** யாத். 23:20; 1 சாமு. 2:9; 1 நாளா. 4:10

**5** **செப்பனியா 3:17 - வல்லமையுள்ள தேவன்**
**தியானத்திற்கு:** யாத். 9:16; உபா. 7:21; 1 நாளா. 29:11,12

**6** **சங்கீதம் 121:5 - கர்த்தர் உங்களுக்கு நிழலாயிருக்கிறார்**
**தியானத்திற்கு:** சங். 57:1; ஏசாயா 51:16; மத். 17:5

**7** **1 சாமுவேல் 12:22 - நீங்கள் தேவனுடைய ஜனம்**
**தியானத்திற்கு:** லேவி. 26:12; எரே. 7:23; 11:3; எபி. 8:10

**8** **2 கொரிந்தியர் 9:10 - கர்த்தர் உங்களைப் பெருகப்பண்ணுவார்**
**தியானத்திற்கு:** ஆதி. 16:10; எசே. 36:30,37; எபி. 6:14

**9** **சங்கீதம் 91:4 - கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலம்**
**தியானத்திற்கு:** யாத். 19:4; உபா. 32:11,12; ரூத் 2:12

**10** **ஓசியா 6:3 - கர்த்தர் உங்களிடத்திற்கு வருவார்**
**தியானத்திற்கு:** யோவான் 3:31; அப். 1:11; எபி. 10:37

**11** **மீகா 7:15 - அதிசயங்களை செய்கிற தேவன்**
**தியானத்திற்கு:** யாத். 34:10; யோபு 5:9; சங். 72:18; 86:10

**12** **சங்கீதம் 125:1 - சீயோன் பர்வதம்**
**தியானத்திற்கு:** ஏசாயா 8:18; யோவேல் 2:32; மீகா 4:7

**13** **சங்கீதம் 115:14 - கர்த்தர் உங்களை வர்த்திக்கப்பண்ணுவார்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 24:3; 1 நாளா. 21:3; எசே. 36:10,11

**14** **ஏசாயா 60:15 - கர்த்தர் உங்களை மகிழ்ச்சியாய் வைப்பார்**
**தியானத்திற்கு:** சங். 43:4; ஏசாயா 35:10; 61:7; ஆபகூக் 3:18

**15** **சங்கீதம் 51:10 - கர்த்தர் தமது ஆவியைத் தருவார்**
**தியானத்திற்கு:** எசே. 11:19; யோவான் 3:3-8; எபே. 4:22-24

**16** **ஏசாயா 60:2 - தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்**
**தியானத்திற்கு:** லேவி. 9:6,23; எண். 20:6; 2 நாளா. 7:3

**17** **சங்கீதம் 128:2 - பாக்கியமும், நன்மையும்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 65:4; நீதி. 16:20; எபி. 11:40

**18** **ஏசாயா 66:13 - தாயைப்போல தேற்றுகிறவர்**
**தியானத்திற்கு:** சங். 86:17; 94:19; ஏசாயா 12:1; எரே. 31:13

**19** **சங்கீதம் 5:11 - நீங்கள் கெம்பீரிப்பீர்கள்**
**தியானத்திற்கு:** யோபு 8:21; ஏசாயா 12:6; சக. 2:10

**20** **ஏசாயா 51:16 - கர்த்தருடைய கரத்தின் நிழல்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 63:7; உன். 2:3; ஏசாயா 32:2

**21** **சங்கீதம் 147:14 - கர்த்தர் உங்களை திருப்தியாக்குவார்**
**தியானத்திற்கு:** லேவி. 26:5; ரூத். 2:1-18; லூக்கா 9:12-17

**22** **ஏசாயா 60:19 - தேவனே உங்களுக்கு மகிமையாயிருப்பார்**
**தியானத்திற்கு:** எசே. 10:19; லூக்கா 2:4-9; 2 கொரி. 3:17,18

**23** **நீதிமொழிகள் 23:18 - உங்கள் நம்பிக்கை வீண்போகாது**
**தியானத்திற்கு:** யோபு 13:15; நீதி. 3:5,6; எரே. 17:7

**24** **2 தீமோத்தேயு 4:17 - கர்த்தர் உங்களைப் பெலப்படுத்துவார்**
**தியானத்திற்கு:** சங். 27:1; 138:3; ஆபகூக் 3:19; பிலி. 4:13

**25** **சங்கீதம் 23:4 - தேவன் உங்களோடு இருக்கிறார்**
**தியானத்திற்கு:** உபா. 31:8; யோசுவா 3:7; மத். 28:20

**26** **சகரியா 10:12 - கர்த்தருடைய நாமம்**
**தியானத்திற்கு:** ஏசாயா 54:5; ஆமோஸ் 4:13; லூக்கா 1:49

**27** **நீதிமொழிகள் 28:26 - ஞானமாய் நடவுங்கள்**
**தியானத்திற்கு:** நீதி. 23:19; ஏசாயா 52:13; கொலோ. 4:5

**28** **ஏசாயா 52:12 - கர்த்தர் உங்கள் முன்னே போவார்**
**தியானத்திற்கு:** யாத். 13:21; சங். 68:7,8; ஏசாயா 45:2

**29** **உபாகமம் 28:14 - கர்த்தர் உங்களை மேலாக்குவார்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 2:8; சங்கீதம் 3:3; ஏசாயா 58:14

**30** **ரோமர் 8:37 - கர்த்தர் ஜெயம் தருவார்**
**தியானத்திற்கு:** நீதி. 21:31; 1 கொரி. 15:57; 2 கொரி. 2:14

**31** **சங்கீதம் 103:5 - நன்மையினால் திருப்தி**
**தியானத்திற்கு:** சங். 65:4; 107:8; எரே. 31:14; அப். 14:17




**இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்**

இணையதளம் : www.jesuscalls.org
ஃபேஸ்புக்: Jesus Calls Tamil
யூடியூப்: JesusCalls சப்ஸ்கிரைப் செய்திடுங்கள்
ஃபேமிலி சேனல் மொபைல் செயலி
ஃபேமிலி சேனல் இணையதளத்தில் www.familychannel.org





Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District.
and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest

தெலுங்கானா மாநிலம்
# கம்மத்தில்
இயேசு அழைக்கிறார்
# பிரார்த்தனை திருவிழா

2025 ஜனவரி **14 & 15**
மாலை 6 மணி

சாமுவேல் தினகரன்
ஸ்டெல்லா ரமோலா
டேனியல் டேவிட்சன்

இடம்:
**SR & BGNR அரசினர் கல்லூரி மைதானம்**
NTR சர்க்கிள், கம்மம் - 2

மேலும் விவரங்களுக்கு: 9361906248
பாங்கு கொண்டு பாக்கியம் பெறுங்கள்

## வாலிபர் ஆசீர்வாத கூட்டம்
2025 ஜனவரி 15 காலை 9:30 மணி
இடம்:
**S R CONVENTION A/C HALL,**
ROTARY NAGAR, WYRA ROAD,
KHAMMAM-507002, TELANGANA.

முன்பதிவு செய்து கலந்து கொள்ளுங்கள்



பிப்ரவரி 2025 **2** ஞாயிறு
பிற்பகல் **2** மணி

சென்னையில்
# மாணவர் பிரார்த்தனை
இடம்: *St.* **ஜார்ஜ் பள்ளி மைதானம்,**
பூந்தமல்லி நெடுஞ்சாலை,
பச்சையப்பன் கல்லூரி எதிரில், சென்னை - 30.
மேலும் விவரங்களுக்கு: 6381754517, 6381754514

அனைவரும் வந்து ஆசீர்வாதம் பெறுங்கள்.
மேலும் தகவல்களுக்கு, இணையதளம்: *www.jesuscalls.org*
ஜெபித்தும், காணிக்கை கொடுத்தும் இந்தக் கூட்டங்களை தாங்குங்கள்.

இந்தக் கூட்டங்களில் ஒன்றை நீங்கள் தாங்குவதற்கு (ஸ்பான்சர் செய்ய) விரும்பினால், உங்களோடு இணைந்து ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு ஊழியம் செய்வதற்கு அது எங்களுக்கு அதிக ஆசீர்வாதமாக அமையும். ஆண்டவர் உங்களை வழிநடத்துகிறபடி நீங்கள் கொடுக்கலாம். இதற்காக ஆண்டவர் உங்களை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணி ஆசீர்வதிப்பார். இந்தக் கூட்டங்களில் *Dr.* பால் தினகரன், விசேஷித்தவண்ணம் உங்களுக்காகவும் உங்கள் குடும்பத்தினர் மற்றும் தொழிலுக்காகவும் ஜெபிப்பார்.

இந்த QR CODEஐ ஸ்கேன் செய்து காணிக்கை அளிக்கலாம்

REGISTERED NEWSPAPER RNI NO.TNTAM/2003/10418 RNP LICENSE NUMBER TN/CC(S)DN/588/22-24
WPP LICENCE NUMBER TN/PMG(CCR)/WPP 625/2022-24 DATE OF PUBLICATION 18TH OF EVERY MONTH
POSTED AT PATRIKA CHANNEL, EGMORE RMS, POSTING DATE 19TH - 25TH OF EVERY MONTH

JESUS CALLS
PRAYING FOR THE WORLD

சென்னையில்

# புத்தாண்டு சிறப்பு ஆசீர்வாத கூட்டம்

2025 ஜனவரி **5** ஞாயிறு மாலை 6 மணி

குடும்பமாய், நண்பர்களுடன் வந்து ஆசீர்வாதம் பெறுங்கள்



தேவ செய்தியும் பிரார்த்தனையும்:

## Dr. பால் தினகரன்
& குடும்பத்தினர்

இடம்:

## புனித ஜார்ஜ் பள்ளி மைதானம்
பூந்தமல்லி நெடுஞ்சாலை, பச்சையப்பன் கல்லூரி மெட்ரோ ரயில் நிலையம், சென்னை-30.

044 – 2345 66 77
63817 54514

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

இணையதளம்:
www.jesuscalls.org